# श्री पुरस्तव माहात्म्यम्

# ஸ்ரீ புரஸ்தல மாகாத்மியம்

( மூலமும் உரையும் )

பதிப்பாசிரியர் :

*இருமொழிப்புலவர்*

*வித்வான்* ***வ. கை. கேதாரேச்வர சர்மா,***

*தலைமைத் தமிழாசிரியர்,*

Lady M. Ct. உயர்நிலைப்பள்ளி, புரசை.

*வெளியிட்டது :*

## இந்திய இளைஞர் சங்கம்

***புரசை, சென்னை 7.***

காபிரைட் ] 1954 [ விலை ரூ. 1

BHARATI VIJAYAM PRESS,
TRIPLICANE :: MADRAS 5.

# श्री वेदव्यासकृते ब्रह्माण्डपुराणे पद्मगिरि माहात्म्ये

( दशाध्यायाः )


| अध्यायः | विषयसूचिका | पृष्ठ सं |
|---|---|---|
| 1. | स्थल वैभवकथनं । | 1 |
| 2. | अत्रि मुनेः लक्ष्मीनृसिंह्मप्रसादः । | 8 |
| 3. | भृगुणा देवता पारम्यपरीक्षा, वराहावतारकथनं च । | 18 |
| 4. | नरसिंह्मावतार कथनं । | 29 |
| 5. | त्रिवेणीसंगम कथनं । | 35 |
| 6. | सुदर्शन गिरौ वेङ्कटेशसांनिध्य कथनं । | 43 |
| 7. | श्री रामानुजादि वैष्णवाचार्याणां आविर्भाव कथनं । | 47 |
| 8. | श्री वेंकटेशाय शंख चक्रप्रदानं । घंटावतार कथनं च । | 57 |
| 9. | दशावतार कथनं । | 62 |
| 10. | अत्रिवंशे विष्णुभक्तावतार कथनं । विष्णुचित्तस्य अर्चोपासनं परमपदप्राप्तिश्च फलश्रुतिश्च । | 73 |

॥ श्रीः ॥

वपा परिमलोल्लासमसिताधरपल्लवम् ।
मुखं वरदराजस्य मन्दस्मितमुपास्महे ॥

1949 ஹு பிப்ரவரி மீ அடியேன் புரசை இந்திய இளைஞர் சங்கம் ஏற்பாடு செய்த உல்லாசப் பிரயாணத்தில் சீவரம், முக்கூடல் போன்ற ஸ்தலங்களுக்கு தலைவர் ஸ்ரீ வேங்கடஸ்வாமி நாயுடு அவர்கள் ஸ்ரீ சஞ்சீவி நாயுடு, ஸ்ரீ M. K. ரங்கஸ்வாமி அய்யங்கார் முதலியவர்களுடன் சென்று சீவரத்தில் எம்பெருமானை ஸேவிக்கும் பெரும்பாக்யம் பெற்றேன். அப்பொழுது ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்மப் பெருமானுக்குக் கைங்கர்யம் செய்துவரும் ஸ்ரீ நரஸிம்ஹ பட்டாசாரியார் இந்த கிரந்தத்தை ஸ்ரீ நாயுடுவோடு கூடிய எங்களிடம் காட்டி இந்நூலை அச்சியற்றித் தரின் பெரிய பாக்கிய மாகும் எனத் தெரிவித்தார். ஸ்ரீ நாயுடு அவர்கள் அடியேனிடம இப்பணியை ஒப்புவித்தனர். கிரந்தம முழுவதும் பழைய தாளில் எழுதப்பட்டு செல்லரித்து இருந்தது. நூலை முடியப் படித்தேன். ஸ்ரீ உப. வே. நாவல் பாக்கம் திருமலை சதுர்வேத சதக்ரது வித்வான் ஸ்ரீ நரசிம்மாசார் ஸ்வாமிகளால் நன்கு பரிசோதிக்கப்பட்டு அவரது சிஷ்யர்களான நாவல்பாக்கம் ந்யாய சிரோமணி ஸ்ரீமான் கிருஷ்ண தாதாசாரியார், ஸ்ரீமான் ராஜகோபால் தாதாசாரியார்களால் கிரந்தம் முழுவதும் எழுதப்பட்டிருந்தது. மேலும் இவ்வரிய கிரந்தத்திற்கு ஸ்ரீமான் கரிச்சங்கால் ஸ்ரீனிவாஸாசாரியார் இயற்றிய மணிப்ரவாள உரையும் இருப்பதை அறிந்தேன். கிரந்தத்தின் இறுதியில் சில ச்லோகங்கள் காணப்படவில்லை. உரையும் இல்லை. முதற் பதிப்பாதலாலும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய விருத்தம் வருமோ என்ற பீதியாலும் அடியேன் நூலிலோ உரை

யிலோ ஒன்றையும் கூட்டல் குறைத்தல் திருத்தல் செய்ய வில்லை. விடப்பட்ட கிலமான எழுத்துக்களை எழுதி கிரந்த லிபியை நாகரமாக்கி அச்சிட்டு வெளியிடுகிறேன். ஸ்ரீ காஞ்சி தேவராஜப் பெருமானது பரிவேட்டை உத்ஸவ வைபவம் இந்த கிரந்தத்தில் மிகச் சிறப்பாக வர்ணிக்கப்படுகிறது. பொதுவாக இந்த கிரந்தம் ஒவ்வொரு ஆஸ்திகரிடமும் சிறப்பாக ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ண வாளிடமும் இருத்தல் அவசியமாகும். இந்த கிரந்தத்தை வெளியிட உத்ஸாஹமூட்டிய இந்திய இளைஞர் சங்கத்திற்கும் இந்த கிரந்தத்திற்கு தமிழிலும் ஆங்கிலத்திலும் முன்னுரை வழங்கிய ஸ்ரீமான் அருளாளப் பெருமான் அடியாராகிய தி. ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கட்கும் அறநிலையப்பாதுகாப்பு அமைச்சர் கனம் ஸ்ரீ வெங்கடஸ்வாமி நாயுடு அவர்கட்கும் கூட இருந்து உதவிய நண்பர்கட்கும் நல்ல முறையில் விரைவில் அச்சிட்டுத் தந்த ஸ்ரீபாரதி விஜயம் பதிப்பகத்தாருக்கும் என்னுடைய உளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

14—1—54
புரசை.

வ. கை. கேதாரேச்வர சர்மா.
கௌரவ ஆசிரியர்,
இந்திய இளைஞர் சங்க வெளியீடு இலாகா.

**K. Venkataswami Naidu,**
*Minister (Religious Endowments and Registration).*

Fort St. George,
Madras,

14th January 1954.

The Young Men's Indian League, Purasawalkam, during their excursion to Palayaseevaram in 1949, were presented by the temple Archakas with a manuscript for printing. The young men took it with pleasure and with a great deal of trouble and expense have brought out this book.

This Sthalapuranam which is known as Padmagiri Mahatmyam is part of Brahmandapuranam. Sriman Karichangal Srinivasacharyaswami has written an excellent commentary in manipravalam style. Vidwan Sri V. K. Kedareeswara Sarma, the enthusiastic pandit of Lady Muthiah Chettiar Girls' High School, Purasawalkam, took great trouble to go through the proof and undertook the printing work.

Those who have seen Palayaseevaram will agree that it is a beautiful place with picturesque surroundings. It is situated on the bank of River Palar at the Thiruveni Sangamam called Mukkoodal. Palar, Cheyyar and Vegavathi meet at the place. The little hill called Padmagiri has a beautiful appearance with the temple of Lakshminarasimhaswami at the centre, and Varadarajaswami Mandapam at the top. The topes, tanks and paddy fields all around present a picturesque sight. Even Lakshminarasimha is facing towards Kanchi, as if to tell people that Kanchi is our goal. In very few

places we can see Lakshminarasimha in such an excellent style. The temple is an ideal place for contemplation. We may not believe what all is said in the books but we must agree that the ancient history was certainly bright and glorious. Even tody, the Parvettai festival of Sri Varadarajaswami is a grand sight. On the first of Thai the Lord visits this place and gives blessings to the congregation. Especially at the evening procession, the congregation of all the deities of the surrounding villages in the river is very interesting to see.

By bringing out this Book the League has done meritorious service to the worshippers and has created abiding interest in the place and the festival. This book coupled with Sri D. Ramaswami Iyengar's English brochure on Lord at Seevaram is worth reading many times. May this book serve its great purpose of explaining the greatness of this Padmagiri and its presiding deity.

Among the many useful activities of the League, the publication section is started with the publication of this book. We hope and trust that the League will publish many more books and pamphlets which will be an eye-opener to the public. May Lord Sri Varadaraja of Kanchi and the powerful Lakshminarasimha of Padmagiri (Seevaram) be always with our young men and guide them in their activities.

K. VENKATASWAMI NAIDU.

॥ श्रीः ॥

श्रीमते निगमान्त महादेशिकाय नमः

श्रीमते लक्ष्मीनरसिंहपरब्रह्मणे नमः

श्री पेरुन्देवीनायिका समेत श्री देवाधिराज परब्रह्मणे नमः

# முன்னுரை

भक्तस्य दानवशिशोः परिपालनाय
भद्रां नृसिंह कुहनामधिजग्मुषस्ते ।
स्तम्भैकवर्जमधुनाऽपि करीशनूनं
त्रैलोक्यमेव निभृतं नरसिंहगर्भे ॥

(वरदराज पंचाशत)

காஞ்சீபுரத்திற்கு சுமார் 10 மைல் கிழக்கே பாலாற்றங் கரையில் ஒரு வெகு அழகான குன்றும் அதில் ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்ஹப்பெருமான் கோவிலும் இருக்கின்றன. இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தை இருப்புப் பாதை மார்க்கமாகச் சென்றாலும் செங்கல்பட் காஞ்சீபுரம் சாலை மார்க்கமாகச் சென்றாலும் காணாமல் இருக்க முடியாது. பத்மகிரியென்று புராணப் பிரசித்தமான அந்த சிறு மலையையொட்டி சீவரம் என்று அழகிய கிராமம் ஒன்று இருக்கிறது. இந்த இடத்திற்குச் சற்று தூரத்தில் பாலாறு செய்யாறு என்ற இரு நதிகளும் அந்தர்வாஹினியான (பூமிக்குள் பிரவகிக்கிற) வேகவதி யென்கிற நதியும் ஆக மூன்று புண்யநதிகள் சேருவதனால் இதுவுமொரு திரிவேணி ஸங்கமம் என்று கொண்டாடக்கூடிய திருமுக்கூடல் என்ற க்ஷேத்ரமும் காணப்படும். கண்ணைக் கவரக்கூடிய ரமணீயமான இந்த பத்மகிரியினுடையவும் ஆத்மாவை வசீகரிக்கக்கூடிய அதில் நித்ய

வாஸம் செய்யும் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மப் பெருமானுடைய வும் அருமை பெருமைகளைப் பாராட்டுகிறது இந்தப் புராணம். ஸ்தல ராமணீயகத்தாலும் ஜலராமணீயகத் தாலும் எங்குமுளன் என்று பிரஹ்லாதாழ்வாரால் நிரூபிக்கப்பட்ட எம்பெருமானுடைய ஸாந்நித்யத்தாலும் பெருமை வாய்ந்த இந்த புண்ணிய பூமியை வரதராஜப் பெருமாள் பேரருளாளன் என்றும் தேவாதிராஜன் என் றும் உலகத்தோரால் கொண்டாடப்படும் மாதங்காசல மௌளி மண்டனமணி வருஷத்திற்கொருமுறை தை மாதம் இரண்டாம் தேதி கனுமகோத்ஸவத்தன்று அல ங்கரித்தருளுகின்றார்.

உத்தராயணம் பிறந்தவுடன் மாட்டுப் பொங்கல் என்ற விசேஷித்த பண்டிகை தினத்தன்று ஸ்ரீ பேரரு ளாளன் திவ்யகாட்சியளிப்பதைக்கண்டு மகிழ்ந்து குன்று நலம் பெற நாடெங்கும் திரண்டுவரும் அப்பரிவேட்டை மகோத்ஸவத்திற்கு.

இத்தகைய மேன்மை பொருந்திய இந்த திவ்ய ஸ்தலத்திற்கு ஏற்பட்ட புராணம் நீண்டகாலமாக கையெழுத்துப் பிரதியாகவே இருந்து இதுகாறும் அச்சிடப்படாமலே இருந்தது. விஷ்ணுசித்தர் என்பவ ருக்கும் மரீசி என்பவருக்கும் ஸம்வாதரூபமாய் அமைந்து பிரம்மாண்ட புராணத்திலே அர்ச்சையின் பெருமையை விளக்கவந்த பகுதியிலே காணப்படும் பத்து அத்யாயங் கள் கொண்ட இந்தப் புராணம் ஸந்நிதி அர்ச்சகர்கள் திருமாளிகையிலேயே நெடுகாலம் மாத்ருகையாயிருந்த தாகத் தெரியவருகிறது. ஸ்ரீமத் உப. வே. வித்வான் கரிச்சங்கால் ஸ்ரீநிவாஸாசாரி ஸ்வாமி என்கிற பெரியார் இந்த கிரந்தத்திற்கு அழகியதொரு மணிப்பிரவாள வியாக்யானத்தையும் அமைத்து வைத்தார் என்றும்

தெரிகிறது. அப்புராணம அந்த வியாக்யானத்துடன் எனது நண்பர் M. Ct. பெண்பாடசாலை தலைமைத் தமிழ் உபாத்தியாயர் பிரம்மஸ்ரீ வித்வான் V. K. கேதாரேச்வர சர்மா அவர்களுடைய உழைப்பினாலும ஊக்கத்தினாலும் அச்சிடப்பட்டு வெளி வருகிறது. தஞ்சாவூர் ஜில்லா வரகூர் கிராமத்திலே பிறந்த ஸ்ரீ சர்மா அவர்கள் ஜன்மாவில் மட்டும் ஸ்மார்த்தராய், ஞானபாகத்தாலே ஒரு உயர்ந்த வைஷ்ணவராகவே விளங்குகிறார். திவ்ய பிரபந்தத்திலே அதிலும் திருப்பாவையில் அவருக்கு உள்ள ஊற்றம் பாராட்டத்தக்கது. ஸ்ரீ வைஷ்ணவத்தைச் சார்ந்த ஆழ்வார்கள் ஆசார்யர்கள் கடாக்ஷத்தை நிரம்பப் பெற்றமையால் இந்த அழகிய புராணத்தை அச்சிட்டு வெளியிடும் பாக்யம் இவருக்குக் கிடைத்தது. வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லுவரான இவர் இந்த வெளியீட்டில் முற்படத்தகுந்த அதிகாரியே ஆவர். சில்லாண்டுகளுக்கு முன் இந்த திவ்யதேசத்தில் புரசை இந்திய இளைஞர் சங்கத்தோடு ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்மனை அடிபணியும்போது அச் சங்கத்தினரால் இவருக்கு இந்த புராணத்தை வியாக்யானத்துடன் வெளியிட வேண்டுமென்று ஆக்ஞை பிறந்ததாகவும் அதை எம்பெருமானுடைய நியமனமென்றே சிரஸாவகித்து இப்பணியில் சங்கத்தாருடைய பூரண உதவியோடு ஈடுபட்டு இந்நூலை வெகு அழகாகச் செய்து முடித்திருக்கிறார். அன்னாருக்கும் இந்திய இளைஞர் சங்கத்திற்கும் நம்மனைவருடைய வந்தனங்களும் உரியனவாகுக.

புராணமும் வ்யாக்யானமும் எளிய நடையில் அமைந்துள்ளன. இந்த பத்மகிரியிலே நித்யவாசம் பண்ணுகிற நரசிம்மப் பெருமானுடையவும் வருஷத்திற்கொருமுறை இவ்விடத்திற்கு எழுந்தருளி மலைமேலுள்ள மண்டபத்

திலே மகோத்ஸவம் கண்டருளும் பேரருளாளனுடையவும் ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்திற்கு முக்ய ஆசார்யர்களாய் விளங்கும் ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீமன் நிகமாந்த மகாதேசிகன் இவர்களுடையவும் ஒப்புயர்வற்ற பெருமையை விஸ்தாரமாக அனுபவிக்கும் இந்தப் புராணத்தையும் வ்யாக்யானத்தையும் பகவத் விஷயத்திலும் பாகவத விஷயத்திலும் ப்ரீதியுடைய அனைவரும் அறியக் கற்று ஆனந்திக்க வேண்டும் என்பதே அடியேனுடைய வேண்டுகோள்.

காஞ்சீபுரம்
விஜய வருஷம்
தைமீ 1௳
14—1—54

தி. ராமஸ்வாமி.

श्रीः

# श्रीपुरस्तव माहात्म्यम्

## प्रथमोध्यायः प्रारंभः

श्रीमद्पद्मगिरीशान लक्ष्मीनरहरिर्विभुः ।
एवमाराधितः सद्भिः भूयादाचंद्रतारकम् ॥ १ ॥
श्रीलक्ष्मीनृहरेः पादसरोजैकान्तमानसः ।
व्यासो यो भगवान् साक्षाद्विष्णुः जिष्णुस्सनातनः ॥ २ ॥
अष्टादशपुराणानां वक्ता वासिष्ठनंदनः ।
विशिष्टाद्वैतसिद्धांत विशदीकरणक्षमः ॥ ३ ॥
नमामि तं मुनिवरं वेदव्यासं कृपानिधिं ।
वेदशाखा प्रणेतारं वेदवेदांतपारगं ॥ ४ ॥
लक्ष्मी नाथ सामारंभां नाथ यामुन मध्यमां ।
अस्मदाचार्यपर्यन्तां वंदे गुरुपरंपराम् ॥ ५ ॥
योन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
संजीवयत्यखिलशक्तिधरस्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण श्रवणत्वगादीन्
प्राणान्नमो भवते पुरुषाय तस्मै ॥ ६ ॥
योनित्यमच्युत पदांबुजयुग्म रुक्म-
व्यामोहतः तदितराणि तृणायमेने ।
अस्मद्गुरोः भगवतोऽस्य दयैकसिंधोः
रामानुजस्य चरणौ शरणं प्रपद्ये ॥ ७ ॥

कदाचिन्नैमिशारण्ये मुनयश्शंसितव्रताः ।
मरीचिप्रमुखाश्चैव महाभागवतोत्तमाः ॥ ८ ॥

कर्मान्तरे समासीनाः प्रशंसन्तो गुणान् हरेः ।
परत्वव्यूहविभवेष्वर्चायामपि वैभवम् ॥ ९ ॥

अर्चावतारभेदांश्च सैद्ध दिव्यादि भेदतः ।
सैद्धे सर्वातिशायित्वं दिव्ये तत्किंचिदूनतां ॥१० ॥

तत्रापि मानुषेष्वेवं भेदं मुनिवरस्तथा ।
विष्णुचित्त इति ख्यातो विष्णुपादाब्जसंश्रयः ॥ ११ ॥

पृष्टवान् तान् मुनीन् सर्वान् वेदवेदान्तपारगान् ।

मुनयः

शृणुष्व मानुषेष्वेव भेदमर्चास्वरूपिणः ॥ १२ ॥
पुराणेषु च सर्वेषु पाञ्चरात्रागमेषु च ।
वैखानस मुनीन्द्रस्य शिष्यैश्च विशदीकृतं ॥ १३ ॥

(வ்யா) ஒரு கால விசேஷத்திலே நைமிசாரண்யத்திலே **मरीचि** முதலாய மஹா பாகவதோத்தமாளாய் செய்யப்பட்ட விருதங்களையுடைய ரிஷிகளானவர்கள், கர்ம [illegible] பகவானுடைய அகிலகல்யாணகுணங்களையும் **परव्यूह विभवार्चावतार** பேதங்களையும், ஸைத்தாதி பேதத்தாலே, ந்யூநாதிக பாவங்களையும், ஸ்தோத்ரம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்கள். அந்த நைமிசாரண்யத்திலே அந்த அர்ச்சாவதாரத்திலே, முனிச்ரேஷ்டராய், விஷ்ணுபாதாப்ஜத்தை ஆச்ரயித்தவராய், விஷ்ணுசித்தரென்று ப்ரசித்தரான ரிஷியானவர், **वेदवेदांतपार**கதாளான அந்த முனிச்ரேஷ்டர்களைக் கேட்டார்.

पर्वताग्रे नदीतीरे दिव्य देशेषु च द्विजैः ।
प्रतिष्ठितं तु यद्बिम्बमाभिरूप्येण चान्वितं ॥ १४ ॥

ततः श्रिया च भूम्या च सन्निधत्ते सदाहरिः ।
तुलसी काननं यत्र यत्र पद्मवनानि च ॥ १५ ॥

वसन्ति वैष्णवा यत्र सन्निधत्ते सदा हरिः ।
अनन्य मानसा भक्ता यत्र यत्र वसन्ति वै ॥ १६ ॥

तत्र श्रिया समेतश्च सन्निधत्ते सदा हरिः ।
एवं महाभागवता देशे यत्र वसन्ति वै ॥ १७ ॥

तत्रैव सन्निधत्ते हि भगवान् पुरुषोत्तमः ।
अन्यत्र केवलनरैः डंबार्थं पूज्यते यदि ॥ १८ ॥

ரிஷிகள் விஷ்ணு சித்தரைப் பார்த்து அருளிச் செய்தார்கள், கேளுமய்யா! லோகஸம்ரக்ஷணார்த்தமாக அர்ச்சாரூபியான பகவானுடைய **मानुषस्थल**ங்களிலே தாரதம்யமானது. அஷ்டாதச புராணங்களிலேயும் ஸ்ரீ பாஞ்சராத்திராகமங்களிலேயும் "**ये नखाः ते वैखानसाः**" என்றபடியே, பாபரஹிதாளான விகனஸாளுடைய சிஷ்யரான அத்ரி ப்ருகு பரத்வாஜ காச்யபர்களாலே சொல்லப்பட்டது பர்வதாக்ரத்திலேயும், மஹா நதீதீரங்களிலேயும், ரிஷிகள் ஆழ்வார்கள், ஆசார்யாள் உகந்தருளின திவ்யதேசங்களிலேயும், பிரம்மநிஷ்டாளாலே பிரதிஷ்டை பண்ணப்பட்டு ஆபிரூப்யத்தையுடைத்தான திவ்ய மங்கள விக்ரஹத்திலே, பகவானானவர், பெரிய பிராட்டியாரோடே ஸதா ஸாந்நித்யம் செய்தருளுவர், துளஸீவனத்திலேயும், பத்ம வனத்திலேயும், ஸ்ரீவைஷ்ணவாளுடைய

पुर ग्रामादिषु मुने तत्पुर ग्रामपूजकैः ।
पूजनीयश्च तान्येषां वन्दनीयस्सदा विभुः ॥ १९ ॥

एवं मानुषदेशस्य सम्यग्भेदा निरूपिताः ।
अष्टाविंशतिसंयुक्त शतान्युक्तानि भूतले ॥ २० ॥

ऋषिमिश्च पुराणेषु तेष्वष्टैव स्वयंभवः ।
दिव्यान्यार्षाणि चान्यानि पूजितानि महर्षिभिः ॥ २१ ॥

अष्टोत्तरशतं तेष्ट दिव्यसूरिगणादृतं ।
अनन्याचार्यवर्यैश्चाप्यादृतानि महर्षिभिः ॥ २२ ॥

तत्र श्री पुरुषोत्तमे स्वमहिमा संदर्शनार्थं हरिः ।
यस्माद्गोपकुमारकैः सहमहद्वैचित्र्य लीलाकृतिः ॥ २३ ॥

स्वीयं वाक्यममोघमेव कृतवान् स्वीयं प्रसादं प्रति ।
तत्रस्थैरभि पूज्यते गुरुवरैः कैश्चिन्नसंभाव्यते ॥ २४ ॥

---

திருவோலக்கத்திலேயும், பகவான் ஸதா ஸாந்நித்யம் செய்தருளுவர், இதர தேவதைகளை எண்ணாதவாளான பாகவதர்கள் எங்கே எழுந்தருளி யிருக்கிறார்களோ, அங்கே ஞான சக்த்யாதி பரிபூர்ணனான புருஷோத்தமன் தானே வாஸம் செய்தருளுவன். பாகவதஸம்ருத்தி யில்லாத இடத்திலே கேவலம் மனுஷ்யாளாலே டம்பார்த்தமாக பட்டணக்ராமாதிகளிலே ப்ரதிஷ்டை பண்ணப்பட்டால் அந்தந்த பட்டணக்ராமங்களிலே யிருக்கிற ஜனங்களாலேயும் அந்தந்த அர்சகாளாலேயும் பூஜிக்கப்படுவர். இதர ஜனங்களுக்கு விபுவான ஸ்வாமி ஸதாவந்தனீயர். இப்படி கேவலம் மானுஷ ஸ்தலங்களுடைய

श्रीमद्यादव भूधरे स भगवान् रामप्रियः श्रीधरः ।
नित्यां तां स्वविभूतिमद्भुततमां सम्यक् प्रकाश्य स्थितः ॥२५॥
श्रीरामानुज संपदात्मज इति प्रख्याप्य नामस्वयम् ।
तत्प्रख्यापित वैंभवो विजयते नारायणः श्रीपतिः ॥ २६ ॥

---

*பேதங்கள் நிரூபிக்கப் பட்டது. புராணங்களிலே ரிஷிகளாலே, 108 ஸ்தலங்கள் பூமியிலே சொல்லப்பட்டது. அந்த நூத்தியிருபத்தி எட்டு ஸ்தலங்களிலே ஸவயம வயகத ஸதலஙகள எட்டு. மீதி பரமமாத்தேவதைகளாலும், ரிஷிகளாலும், ஆராதிக்கப்பட்டதுகள். அதில் 108 ஸ்தலங்கள் திவ்யஸூரிகளாலே உகந்தருளப்படப் போகிறதுகள். மற்றவைகள் ஆசார்யர்களாலே அபிமானிக்கப்படப் போகிறதுகள்.*

*அந்த ஸ்தலங்களுக்குள்ளே ஸ்ரீ புருஷோத்தமத்திலே பகவான் தம்முடைய மாகாத்ம்யத்தை வெளியிடுகைக்காக யாதொரு காரணத்தினாலே கோபாலர்களோடேகூட மஹத்தான விசித்ர லீலாக்ருதி யுடையவராய்,* **विभ्रद्वेणुं जठरपटयोश्शृंगवेत्रे च कक्षे** *" என்கிறபடியே ஸபாலதசையிலேயே அரையிலே வேணுவையும், ச்ருங்க வேத்ரங்களை கக்ஷத்திலேயும், இடது திருக்கையில் தத்யோதனத்தையும், விரலிடுக்குகளில் உபதம்சங்களையும் தரித்துக்கொண்டு தம்முடைய, பரிஹாஸோக்திகளாலே கோப குமாரர்களை சிரிப்பித்து,* **चण्डालवाटिकायां तु मत्प्रसादं सुपावनं ।** *என்கிறபடியே தம்முடைய* **अमोघमा**க *செய்ந்தருள வேணுமென்று தம்முடைய ப்ரஸாதத்தை பாலகாளுக்கு குடுத்து அவாள் கையிலிருக்கிற ப்ரஸாதத்தை தாமும் அமுது செய்தருளினரோ, ஆகையினாலே அந்த தேச ஜனங்களினாலே அந்த சரித்திரம் அங்கீ*

एवं श्रीभूत नगरे महीसार पुरेऽपि च ।
अन्येष्वपिच भक्तानां अवतारस्थलेऽपि च ॥ २७ ॥
भक्ताभिमत मूर्तिस्सन् भगवान् संभविष्यति ।

विष्णुचित्तः—

विष्णोस्थानानि सैद्धानि श्रुतानि बहुशो मया ।
दिव्यान्यार्षाणि च तथा सेवितानि मुनीश्वराः ॥ २८ ॥
ताम्रपर्णी नदीतीरे कावेर्यास्सरितस्तटे ।
पयस्विन्याः तटे चैव पिनाकिन्यास्तटेऽपि च ॥ २९ ॥
विष्णोस्थानानि सन्त्येव बहूनि मुनिसत्तमाः ।
यत्र स्थित्वा तपस्तप्तुं योग्यं स्थानं वदन्तु मे ॥ ३० ॥

கரிக்கப்பட்டது. அது ஆசார்யாளாலே அங்கீகரிக்கப் படப் போகிறதில்லை.

யாதவகிரியிலே பகவானுன ஶ்ரீய: பதியான நாராயணன் ராமப்ரிய ரென்கிற திருநாமத்தை யுடைத்தானவராய், अनवद्य மான தம்முடைய திருநாமத்தை ப்ரகடனம் பண்ணி ப்ரஸித்த வைபவத்தை யுடைத்தானவராய் ஶ்ரீய: பதியான நாராயணன் விளங்கப்போகிருர்.

இந்த ப்ரகாரமாக பூதபுரியிலும் மஹீஸார நகரத்திலேயும், இன்னும் அனேக பக்தாளவதரிக்கப் போகிற ஸ்தலங்களிலேயும் பக்தாளுக்குகந்த மூர்த்தியை யுடையவராய் பகவானவதரிக்கப் போகிருர். விஷ்ணு சித்தர் கேழ்கிருர், விஷ்ணுவினுடைய ஸ்தானங்களில், ஸைத்தங்கள், திவ்யங்கள், ஆர்ஷங்கள் முதலான அனேக ஸ்தலங்கள், என்னுலே ஸேவிக்கப்பட்டதுகள். தாம்ரபர்ணீ தீரத்திலேயும் காவேரீ தீரத்திலேயும், பயஸ்வினீ தீரத்தி

जलरामण्यकं यत्र स्थलारामण्यकं तथा ॥ ३१ ॥
वनरामण्यकं चापि गिरिश्च बहुसुंदरः ।
यत्र स्थित्वा च तपतां शीघ्रं भवति तत्फलं ॥ ३२ ॥
यत्र विष्णुः श्रिया सार्धं सान्निध्यं वितनोति सः ।
तादृशं क्षेत्रमतुलं वदन्तु मुनिसत्तमाः ॥ ३३ ॥

**इति ब्रह्माण्डपुराणे अर्चावतारस्थलवैभवकथने विष्णुचित्त मरीचिसंवादे पद्मगिरिमाहात्म्ये प्रथमोऽध्यायः ॥**

லேயும், அநேக விஷ்ணு ஸ்தானங்களை இருக்கிறது. ஆனாலும் ஹே முனிஸ்ரேஷ்டர்களே, எந்தஸ்தானம் தபஸ்ஸு பண்ண யோக்யமோ அந்தஸ்தானத்தை எனக்கருளிச் செய்யவேணும்.

எந்த ஸ்தலத்திலே ஜல ஸமிருத்தியும், ஸ்தல ராமணீயகமும், வனராமணீயகமும், பர்வதமு மிருக்கிறது. எங்கேயிருந்து தபஸ்ஸு பண்ணுகிறவர்களுக்கு அதன் பலன் சீக்கிரம் பயனளிக்குமோ, எந்தஸ்தலத்திலே விஷ்ணுவானவர் லக்ஷ்மீ ஸமேதராய் ஸாந்நித்யம் செய்தருளுகிறாரோ, அப்படிப்பட்ட ஒப்பில்லாமல் அதுலமாயிருக்கிற க்ஷேத்திரத்தை, ஹே சிறந்த முனிவர்களே சொல்லக் கடவீர்கள்.

பிரம்மாண்ட புராணத்தில் அர்ச்சாவதாரப் பெருமையைக்
கூறுவதான விஷ்ணு சித்தர் மரீசி இவர்களுடைய
ஸம்வாதத்தில் பத்மகிரி மாகாத்ம்யத்தில்
முதல் அத்யாயம் முற்றிற்று.

## द्वितीयोऽध्यायः प्रारंभः

**मरीचिः —**

विष्णुचित्त महायोगिन् श्रुणुष्व सुसमाहितः ।
श्री वैखानस सच्छिष्यः सच्छात्रश्च ममानघः ॥ १ ॥

लक्ष्मीनृसिंह तद्भक्तस्तस्य सांनिध्य वांछया ।
अत्रिरात्राश्रमे पुण्ये स्थित्वा सम्यक् तपश्चरन् ॥ २ ॥

---

மரீசியானவர் சொல்லுகிறார்—வாரீர் மஹாயோகியான விஷ்ணு சித்தரே, ஸாவதானமாய்க் கேளும். ஸ்ரீ விகனஸருடைய சிஷ்யரும், எனக்கு ஸஹபாடியும், பாபரஹிதருமாயிருக்கிற லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய ஸத்பக்தரான, அத்ரியானவர் அந்த லக்ஷ்மீந்ருஸிம்மனுடைய ஸாந்நித்ய வாஞ்சையினாலே புண்யமான இந்த ஆசிரமத்திலேயிருந்து நன்றாக தவம் செய்தவராய்க் கொண்டு அந்த லக்ஷ்மீந்ருஸிம்மனுடைய ஸேவைகிடையாததாலே, மிகவும் வாடிய மனமுடையவரானார். இப்படி சிந்தைப் பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, ஒரு அசரீரிவாக்கு கேழ்கப்பட்டது. என்ன வென்றால், வெங்கடாசலத்திற்கு ஐந்துயோசனை தெற்குதிக்கிலே, பாடலாத்ரிக்கு இரண்டு க்ரோசமாத்திரம் மேற்கு திக்கிலே, ஸ்ரீ ஹஸ்திசைலத்திற்குக் கிழக்கே, யோஜனை மாத்திரத்திலே, ஸ்ரீமத் ஸுதர்சன கிரிக்கும், திரிவேணி ஸங்கமத்திற்கும், உத்தரதிக்கிலே, ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திலே, ஸ்ரீமானாய், யக்ஷகின்னரகந்தர்வாளாலே ஸேவிக்கப்பட்டு அத்யந்தம் மனோஹரமாய், பத்மகிரி யென்று பெயரை யுடைத்தான பர்வதமிருக்கிறது. ஓய் ரிஷியே, அந்தப் பர்வதத்திலே லக்ஷ்மீந்ருஸிம்மனுடைய ஸாந்நித்யம் நிச்சயம். அங்கே

तत्सन्निध्यस्य चालाभात् बहुखिन्नमना अभूत् ।
तस्य चिन्तयमानस्य वागभूदशरीरिणि: ॥ ३ ॥
वेङ्कटाद्रेः दक्षिणतः पञ्चयोजनमात्रके ।
द्विक्रोशमात्रे योगीन्द्र पाटलाद्रेस्तु पश्चिमे ॥ ४ ॥
प्राग्भागे हस्तिशैलस्य एकयोजनमात्रतः ।
श्रीमत्सुदर्शनगिरेः त्रिवेण्यास्तूत्तरे तटे ॥ ५ ॥
श्रीमान् पद्मागरिनाम क्षेत्रे सत्यव्रते शुभे ।
यक्ष किन्नर गन्धर्व सेवितः सुमनोहरः ॥ ६ ॥

---

போய் தபஸ் பண்ணினவராய் ஹரியினுடைய அருளைப் பெறப்போகிறீர். ந்ருஸிம்மனுடைய ஸாந்நித்யத்தை அடையப்போகிறீர். அந்த ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திலே, பிரம்மாவானவர், பூர்வகாலத்திலே பகவானைக் குறித்து பக்தி புரஸ்ஸரமாய் அச்வமேதயாகத்தாலே, ஆராதித்தார். பிறகு அந்த ஹஸ்திசைலத்தில் விஷ்ணுவினுடைய ஸாந்நித்யத்தை யடைந்தார்.

அந்த ப்ரம்மாவானவர் அவருடைய ஸேவையினாலே சித்த சுத்தியையடைந்தார். ஆகையினாலே வாருமையா ரிஷியே, அந்த ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திலேயிருக்கிற பத்மகிரியிலே ப்ரபுவான லக்ஷ்மீந்ருஸிம்மன் நித்யமாக ஸாந்நித்யம் செய்தருளுகிறார். அங்கே போய் தபஸ் பண்ணி ஸித்தியை யடையப் போகிறீர். ஸம்சயமில்லை. முனிச்ரேஷ்டரான அத்ரியானவர் அந்த அசரீரி வாக்கைக் கேட்டு அந்த ஸத்யவ்ரதக்ஷேத்திரத்திலே த்ரிவேணீ ஸங்கமத்திலே விஷ்ணுவினுடைய ஸாந்நித்யத்தை ஸந்தோஷமாக ப்ரார்த்தித்துக்கொண்டு மனோஹரமாய் நானாவித

वर्तते रमणीयो यः शैलस्तुण्डीरमण्डले ।
लक्ष्मीनृसिह्मसान्निध्यं तत्रास्ति नियतं मुने ॥ ७ ॥
तत्र गत्वा तपः कुर्वन् सान्निध्यं प्राप्यसे हरेः ।
तस्मिन् सत्यव्रते क्षेत्रे ब्रह्मा पूर्वं हरिं प्रति ॥ ८ ॥
हयमेधेन विधिना इयाज सुसमाहितः ।
सान्निध्यं प्राप्तवान् विष्णोः हस्तिशैलस्य मूर्धनि ॥ ९ ॥
तद्दर्शनाच्चित्तशुद्धिं प्राप्तवानब्जसंभवः ।
तस्मात्सत्यव्रतक्षेत्रे स्थितौ पद्मगिरौ मुने ॥ १० ॥
तनोति नित्यसांनिध्यं लक्ष्मीनरहरिर्विभुः ।
तत्र गत्वा तपस्तप्त्वा सिद्धिं प्राप्स्यस्यसंशयः ॥ ११ ॥

வ்ருக்ஷங்களாலே சூழப்பட்டும், நானாவித பக்ஷி ஜாலங்களாலே சப்திக்கப்பட்டும் க்ஷீரநதியினுடைய அலைகளினாலே அலம்பப்பட்டிருக்கிற கல் பாறைகளையுடைத்தாயிருக்கிற ஹஸ்திகிரி நாதனுக்கு க்ரீடா நிமித்தமாக வைகுண்டத்தில் நின்றும் கருடனாலே கொண்டு வரப்பட்ட தாமரைப் புஷ்பங்களினாலே நிறைந்திருக்கிற தடாகங்களாலே சூழ்ப்பட்ட அந்த பத்மகிரியினுடைய அடியிலே திருவரசின் கீழேயிருந்து ஸாவதானமாய் இந்திரியங்களை நிக்ரஹித்து மனஸ்ஸிலே சேர்த்து அந்த மனஸ்ஸை லக்ஷ்மீ நிருஸிம்மனுடைய திருவடிகளிலே சேர்த்து, த்ருடவ்ரதராய் நாஸாக்ரன்யஸ்தலோசனராய், அந்த பகவானை விபூதியோடே கூடினவராக த்யானம் பண்ணி ஜபம் பண்ணிக் கொண்டு புருஷர்களுக்கு ஸர்வாபீஷ்டப்ரதமாயும், முக்திப்ரதமாயுமிருக்கிற மந்திரத்தை

अत्रिर्मुनिवरस्तत्र श्रुत्वा वाचममानुषीम् ।
त्रिवेणी संगमे विष्णोः सांनिध्यं प्रार्थयन्मुदा ॥ १२ ॥

तस्मिन् पद्मगिरौ रम्ये नानावृक्षसमावृते ।
नाना मृग गणाकीर्णे पक्षिसंघानुनादिते ॥ १३ ॥

पयस्विनी वीचिमाला विशोधितशिलातले ।
क्रीडार्थं हस्तिनाथस्य वैकुण्ठाच्च गरुत्मता ॥ १४ ॥

आनीते पद्मसंपूर्ण पद्मिनीभिः समावृते ।
तन्मूले पिप्पलीवृक्ष मूलेस्थित्वा समाहितः ॥ १५ ॥

इन्द्रियाणि च संयम्य मनस्याधाय तन्मनः ।
लक्ष्मीनृसिंहपदयोः सन्निवेश्य दृढव्रतः ॥ १६ ॥

नासाग्रन्यस्तनयनः तं विभूत्यादिसंयुतं ।
ध्यायन् जपन् मनुवरं लक्ष्मीनरहरेस्सदा ॥ १७ ॥

रविसंख्याकवर्णैश्च पूर्णं सप्रणवं मुनिः ।
सर्वाभीष्टप्रदं पुंसां मुक्तिप्रदमनुत्तमम् ॥ १८ ॥

जजाप परया भक्त्या निराहारो निराश्रयः ॥

अत्युग्ररूपोनृहरिः ब्रह्मादि सुरसत्तमैः ।
स्तुतोह्यनेन मंत्रेण प्रसन्नोऽभूत्तथाविधः ॥ १९ ॥

*நிராஹாரமாய் நிராச்ரயராய், ப்ரணவத்தோடே பதிமூன்று அக்ஷரமான ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்ம மந்திரத்தை பரமபக்தியினாலே ஜபம் பண்ணினார்.*

ताद्दङ्मन्त्रवरं समस्तफलदं मंत्रेषु सर्वोत्तमं
ध्यायन्नद्भुतवैभवं नरहरिं लक्ष्म्यासमेतं विभुं ।
अत्रिः पद्मगिरौ जजाप जगतामाद्यं स्वभक्तद्रुहं
हत्वा कोपयुतं स्वभक्तविषये तत्कोपशांतिं गतं ॥ २० ॥

एवमत्युग्रतपसा तोषितस्समहामुनेः ।
प्रसन्नोऽभूत्तदा विष्णोः लक्ष्मीनरहरिः प्रभुः ॥ २१ ॥

प्रसन्नवदनः श्रीमान् पुण्डरीकायतेक्षणः ।
दंष्ट्राकरालवदनः सदामालाविराजितः ॥ २२ ॥

---

அத்யுக்ரரூபியான ந்ருஸிம்மன் ப்ரம்மாதி தேவதைகளாலே இந்த மந்திரத்தினலே ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவராய்க் கொண்டு ப்ரஸந்நரானுர். அப்படிப்பட்ட மந்திர ஸ்ரேஷ்டத்தை ஸமஸ்த பலப்ரதமாய், மந்த்ரங்களுக்குள்ளே ஸ்ரேஷ்டமானத்தை அத்புதவைபவத்தை யுடைத்தானவராய், லக்ஷ்மீ ஸமேதராய், விபுவாய் ஸமஸ்த லோகங்களுக்கும், ஆத்யராய், தம்முடைய பக்தாளுக்கு த்வேஷியான ஹிரண்யகசிபுவை ஸம்ஹரித்து அத்யந்தம் கோபத்தோடே கூடினவராய், பிறகு பக்தனை ப்ரஹ்லாதன் நிமித்தமாக கோப சாந்தியையடைந்த லக்ஷ்மீ நரஸிம்மனை த்யானம் பண்ணிக் கொண்டு அந்த மந்திரத்தை ஜபம் பண்ணினுர். இந்த அத்ரியினுடைய அத்யுக்ரமான தபஸ்ஸினலே லக்ஷ்மீ நரஸிம்ம ப்ரபுவானவர் ப்ரஸன்னரானுர். ப்ரஸன்னரான திருமுக மண்டலத்தை யுடைத்தானவராய் புண்டரீகங்கள் போலே ஆயதமான திருக்கண்களை யுடையவராய், தம்ஷ்ட்ரங்களாலே பயங்கரமான திருமுக மண்டலத்தை

उदंचित शिरोग्रीव उन्नत भ्रुकुटीयुगः ।
ललाटनेत्रसंयुक्तस्सिंहकण्ठोऽन्वितश्रिया ॥ २३ ॥

विराजद्रलमकुटः चतुर्बाहुसमन्वितः ।
शंख चक्रधरः श्रीमान् लक्ष्म्याचांके विराजितः ॥ २४ ॥

करेणैकेन तां लक्ष्मीमालिंग्य कमलोद्भवां ।
करेणान्येन सर्वेषां मुद्रामभयदां वहन् ॥ २५ ॥

प्रसार्यैकं पदांभोजं निकुञ्च्यैकं पदांबुजं ।
एवमत्यद्भुताकारः प्रादुरासीन्मुनेस्तदा ॥ २६ ॥

उन्मील्य नेत्रे स मुनिः कोटिसूर्योदयप्रभं ।
प्रणम्य चोत्थाय पुनः प्रणम्य च पुनः पुनः ॥ २७ ॥

யுடைத்தானவராய், ஸிம்மத்தினுடைய காதுகள் போன்ற காதுகளை யுடைத்தானவராய், காந்தியோடே கூடினவராய், விளங்கா நிற்கிற ரத்னகசிதமான திருவபிஷேகத்தை யுடைத்தானவராய், நாலு திருக்கைகளோடே கூடினவராய் சங்கசக்கிரதாராய், திருத்துடைகளின்மீது லக்ஷ்மியினால் விளங்கா நின்றுகொண்டு கமலோத்பவயான அந்த மலர்மங்கையை, திருக்கையினாலே ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு ஒரு திருக்கையினாலே ஸகல ஜனங்களுக்கும், அபய முத்திரையை பிரகாசிப்பித்துக் கொண்டு, ஒருதிருவடியை நீட்டிக்கொண்டு மற்றொரு திருவடியை வளைத்துக்கொண்டு இப்படி அத்யத்புதமான திவ்யமங்கள விக்ரஹத்தோடு கூடினவராய் அந்த அதரிமகர்ஷிக்கு அப்பொழுது ப்ரத்யக்ஷமானார். அந்த யானவர் கண்களைத் திறந்துகொண்டு கோடி ஸூர்

प्रदक्षिणं च कुर्वाणः पश्चात्पार्श्वद्वयोरपि ।
संसेव्य संसेव्य पुनः तेजसां राशिमूर्जितं ॥ २८ ॥

भक्तानां चंद्रवत्सौम्यं शत्रूणामग्निभास्वरं ।
किरीटमकुटादीनां भूषणानां च भूषणं ॥ २९ ॥

मल्लिकामाधवी जाजी चंपकादि सुमस्रजां ।
अत्यन्तगन्धदं सर्वफलानां रसदं शुभं ॥ ३० ॥

श्रियश्चापि श्रियं पुंसां उत्तमं पुरुषं तथा ।
मुनिस्तद्वीक्षणाल्लब्ध ज्ञानेन गतकल्मषः ॥ ३१ ॥

वाचा मधुरया तस्य स्तोत्रं कर्तुं प्रचक्रमे ।
नमस्तस्मै नृसिंहाय लक्ष्म्याधिष्ठित वक्षसे ॥ ३२ ॥

யோதய காந்தியையுடைய, ஸ்ரீலக்ஷ்மி நரஸிம்மனை ஸேவித்து எழுந்திருந்து, திரும்பவும் ஸேவித்து, ப்ரதக்ஷிணம் பண்ணி, புன: புன: தண்டம் ஸமர்பித்து, பார்ச்வங்களிலும், தண்டம் ஸமர்பித்து, ஸகலதேஜஸ்ஸமூகமாய், ஊர்ஜிதமான பக்தாளுக்கு சந்திரனைப்போல அழகாகவும், சத்ருக்களுக்கு ஸூரியனைப்போல அத்யுக்ரமாய் கிரீடாதி பூஷணங்களுக் கெல்லாம், பூஷணமாயும், **सर्वगन्धस्सर्वरसः** என்கிறபடியே, மல்லிகா மாதவீ ஜாஜீ சம்பகாதி குஸுமங்களுக்கு பரிமளப்ரதராய், ஸகல பழங்களுக்கும், ரஸப்ரதராய், சுபங்களுக் கெல்லாம் சுபமாய், லக்ஷ்மிக்கும் லக்ஷ்மியாய், புருஷர்களுக்குள்ளே உத்தமனாய் எழுந்தருளின ஸ்வாமியைச் சேவித்து, அப்பொழுது முனியானவர், அவருடைய கடாக்ஷத்தினாலே, ஸகலகல்மஷங்களுக்கும் போனவராய் அந்த

लक्ष्मीकटाक्षसंलब्ध जगत्सृष्ट्यादिकर्मणे ।
सत्याय सत्यरूपाय त्रिसत्याय नमो नमः ॥ ३३ ॥

महदादि स्थावरांत शेषिणे परमात्मने ।
ततः सूक्ष्म स्वरूपाय स्थूलरूपाय ते नमः ॥ ३४ ॥

सर्वान्तर्यामिणे तुभ्यं सर्वभूतशरीरिणे ।
तत्तद्दोषविमुक्ताय निर्मलाय च ते नमः ॥ ३५ ॥

मातृवत् प्रियकर्त्रे च पितृवद्धितकारिणे ।
सुहृदे सौहृद भ्रात्रे गुरवे ज्ञानदायिने ॥ ३६ ॥

---

*பகவத்விஷயமான மதுரமான வார்த்தையினுலே அந்த பகவானை ஸ்தோத்திரம் பண்ண ஆரம்பித்தார்.*

லக்ஷ்மியினுலே நித்யவாஸம் பண்ணப்பட்ட திருமார்பையுடைத்தான லக்ஷ்மீ நரஸிம்மன் பொருட்டு தண்டம் ஸமர்ப்பிக்கிறேன். லக்ஷ்மீகடாக்ஷத்தினுலடையப்பட்ட ஜகத் ஸ்ருஷ்டியாதிகளை யுடைத்தானவரின் பொருட்டும், நமஸ்காரம் செய்கிறேன். ஸத்ய ஸ்வரூபராய், சேதனுசேதனசரீரியாய், காலத்ரயத்திலேயும், வர்த்தமானராய், ஸத்யமான திவ்ய மங்களவிக்ரஹத்தை யுடைத்தானவராய், எழுந்தருளியிருக்கிற ஸ்வாமியை ஸேவிக்கிறேன். மூலப்ரகிருதி முதலாய் ஸ்தாவராந்தமாய் ஜகத்துக்கு சேஷியாய் பரமாத்மாவாய், அந்தந்த ஸ்தூல ஸூக்ஷ்மமான பூதங்களை சரீரமாக உடைத்தானவராய், ஸர்வ பூதாந்தராத்மாவாய், ஸர்வபூத சரீரியாயிருந்தும், அவைகளில் இருக்கிற தோஷஸ்பர்சமில்லாமல் நிர்மலமாயிருக்கிற தேவரீரை நமஸ்கரிக்கிறேன்.

अज्ञान तिमिरोघस्य निहन्त्रे भास्वते नमः ।
देवतिर्यङ्मनुष्याणां रक्षकाय च ते नमः ॥ ३७ ॥
सर्वन्दैत्यौघ संहर्त्रे रक्षित्रे चासुरद्विषां ।
प्रह्लादवरदायास्तु नमो नृहरि रूपिणे ॥ ३८ ॥

तत्काले कनकाक्षसोदर वधात्युग्रकोपानल-
व्याधूताखिललोकपालकगणैः संप्रार्थिता पद्मजा ।
तत्कोपप्रशमाय सस्मितमुखी सर्वांग शोभान्विता ॥ ३९ ॥
तस्मात् त्वं रमया समेत नृहरे सौम्यश्रितानां कृते ।
लोके स्वाश्रितरक्षणाय निलये गेहेषु सर्वेष्वपि ॥

---

மாதாவைப் போல் ப்ரியத்தை பண்ணுகிறவராயும், ஸர்வகாலத்திலேயும் ஸுஹ்ருத்தாய், ஸௌஹ்ருதத்தையுடைத்தான, ப்ராதாவுமாய், க்ஞானப்ரதரான ஆசார்யனுமாய், அக்ஞானமாகிற அந்தகார ஸமூகத்திற்கு ஸூர்யனுமாயும், ப்ரஹ்லாதவரதராய், ந்ருஸிம்ம ரூபியுமான தேவரீரை ஸேவிக்கிறேன்.

ஹிரண்ய கசிபுவானவன் லோகங்களை யெல்லாமாக்ரமித்து பகவத்பக்தனை ப்ரஹ்லாதன் விஷயமர்கத்ரோஹ சிந்தையைப் பண்ணி ஸம்ஹரிக்கப்பட்ட காலத்திலே அந்த ஹிரண்ய கசிபுவினுடைய வதத்தினலே உண்டான அத்யுக்ரமான கோபாக்கினியாலே பயந்திருக்கிற ஸமஸ்தலோக பாலர்களாலேயும், ப்ரார்த்திக்கப்பட்ட லக்ஷ்மியானவள் அந்த கோபத்தை சமிப்பிக்கிறத்தின் பொருட்டு சிரித்த முகத்தையுடைத்தானவளாய், ஸர்வாவயவசோபையோடு கூடினவளாய், தேவரீரை யடைந்து

सालग्रामशिलासु सर्वं सुलभस्संपूजितो यो भवान् ।
श्रीमत् पद्मगिरौ च सर्वसुलभस्सांनिध्यमातन्वतु ॥
इति संप्रार्थितः तेन मुनिना भावितात्मना ।
अत्रिणा तद्गिरौ पूजां प्राप्तस्सन्निदधे हरिः ॥

**इति श्री ब्रह्माण्डपुराणे अर्चावतारस्थलवैभवकथने विष्णुचित्त मरीचिसंवादे पद्मगिरिमाहात्म्ये द्वितीयोऽध्यायः ॥**

ஜகத்துக்கு ஹிதத்தை பண்ணுகிறவளாய் தேவரீருடைய மடியில் எழுந்தருளியிருந்தாள்.

ஆகையால் லக்ஷ்மீ நரஸிம்மனை நீரானவர் ஆச்ரிதாள் நிமித்தமாக ஸௌம்யனாய், லோகத்தில் ஸ்வாச்ரித ரக்ஷணநிமித்தமாக கோவில்களிலேயும் ஸர்வஸுலபராய் ப்ரார்த்திக்கப்பட்டு பூஜிக்கப்பட்டீர். அப்படிப்பட்ட தேவரீர் பத்மகிரியிலேயும் ஸர்வஸுலபராய் ஸாந்நித்யம் செய்தருளக்கடவீர். பக்தரான அந்த அத்ரி மகரிஷியினால் இப்படி ப்ரார்த்திக்கப்பட்டு பத்மகிரியிலே லக்ஷ்மீ ந்ருஸிம்ம ரூபியாய் பகவான் ஸாந்நித்யம் செய்தருளினார்.

பிரம்மாண்ட புராணத்தில் அர்ச்சாவதாரப் பெருமையைக்
கூறுவதான விஷ்ணு சித்தர் மரீசி இவர்களுடைய
ஸம்வாதத்தில் பத்மகிரி மாகாத்ம்யத்தில்
இரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

## तृतीयोऽध्यायः प्रारंभः

**विष्णुचित्तः** —

अहो धन्यतमोऽसि त्वं नरसिंहस्य वैभवं ।
प्रोक्तवानसि सम्यङ्मे सर्वपापप्रणाशनं ॥ १ ॥

संग्रहेण त्वया प्रोक्तं न तृप्तिर्जायते ततः । (मम)
विस्तरेणोच्यतां विद्वन् सर्वज्ञोऽसि भवान् खलु ॥ २ ॥

सर्वज्ञः सर्वसुलभः सर्वेषां च सुहृत्तमः ।
देवानां दानवानां च समः सत्यपराक्रमः ॥ ३ ॥

कथमाविरभूद्भूम्यां अत्युग्र नृहरिः पुरा ।
भ्रातरौ दैत्यराजानौ पुरा संहृतवान् कथं ? ॥ ४ ॥ (रुषा)

पुनः सौम्य श्रिया सार्धं प्राप्तवान् सौम्य रूपतां ।
एवं पृष्टः स मुनिना शिष्यो विघनसो मुनेः ॥ ५ ॥

*விஷ்ணு சித்தர் கேழ்கிறார்—ஆச்சரியமய்யா ? மரீசியே ! நீர் சிறந்தவர்களுள் சிறந்தவர்.* **सर्वपाप प्रणाशक** *மான லக்ஷ்மீந்ருஸிம்மனுடைய வைபவத்தைச் சொன்னவரானீர். ஸங்கிரஹமாய் அருளிச் செய்தது எனக்கு த்ருப்திகரமாக இல்லை. வித்வானான மரீசியே, நீர் ஸர்வக்ஞனகையால் விஸ்தாரமாய் அருளிச் செய்யவேணும். ஸர்வக்ஞனும் ஸர்வஸுலபனும் ஸர்வ ஸுஹ்ருத்தான பகவான்* **देवानां दानवानां च सामान्यमधिदैवतं ।** *என்கிறபடியே தேவதைகளுக்கும் தானவர்களுக்கும் ஸமானரான ஸத்ய பராக்ரமரான பகவான் நரஸிம்மரூபியாய் பூமியில் எப்படி ஆவிர்ப்பவித்தார். ப்ராதாக்களான தைத்யராஜாக்களை பகவான் எப்படி ஸம்ஹாரம் பண்ணினார். திரும்பவும் லக்ஷ்மியோடே கூடினவராய், ஸௌம்ய [illegible] ரூபத்தை எப்படி அடைந்தார்.*

विष्णुचित्त महाभाग श्रुणुष्व सुसमाहितः ।
क्षीराब्धौ शेषशयने श्रीभूनीलासमन्वितः ॥ ६ ॥

योगनिद्रां गतो विष्णुः लोकरक्षण तत्परः ।
कदाचिदृषयस्सर्वे देवाश्चापि समन्विताः ॥ ७ ॥

ब्रह्मविष्णु महेशेषु कोऽनुसत्त्वगुणोत्तरः ।
सुलभः कोऽनु सर्वेषां जनानां रक्षणे प्रभुः ॥ ८ ॥

एवं विवदमानाश्च भृगुं प्रोचुः महर्षिणः ।
सत्यलोकेऽपि कैलासे क्षीराब्धौ च महामते ।
गत्वा सुपूजनीयः कः सात्विकानां विशेषतः ॥ १० ॥

இப்படி விகனஸ சிஷ்யரான மரீசியானவர் விஷ்ணு சித்தராலே கேட்கப்பட்டுச் சொல்கிறார். வாரீர் விஷ்ணு சித்தரே! மஹாநுபாவரே! ஸாவதானமாய்க் கேளும், திருப்பாற்கடலிலே திருவனந்தாழ் வாறுகிற திருப்படுக் கையிலே திவ்யமஹிஷிகளோடே லோக ரக்ஷணதத்பர ஞன பகவான் யோகநித்ரை செய்தருளுகிற வேளையில் ஒருகால விசேஷத்தில் ரிஷிகளும் தேவதைகளும் ஒன்று கூடி "ப்ரம்ம விஷ்ணு ருத்திராள் என்கிற மூன்றுபேர் களுக்குள் ஸத்வகுண ப்ரதானர் யார்? ஸமஸ்த ஜன ரக்ஷணத்தில் ஸமர்த்தர் யார்? என்றிந்த ப்ரகாரம் விவா தப்பட்டு ப்ருகு மஹரிஷியைப் பார்த்துச் சொன்னார்கள். ஓய் ப்ருகு மஹாமுனியே? ஸத்யலோகத்திலேயும், கைலா ஸத்திலேயும், க்ஷீராப்தியிலேயும் எழுந்தருளி ஸாத்வீகர் களுக்கு பூஜனீயர் யார்? முமுக்ஷுக்களுக்கு மோக்ஷப் ரதர் யார்? "अखिलफल प्रदो हि विष्णुः" என்கிறபடியே **सर्वफलप्रद**ர் யார்? இதுவிஷயம் உம்மாலே நன்றாய்

मुमुक्षूणां मोक्षदायी सर्वाभीष्टप्रदापिकः ।
ज्ञातव्यः सत्वया सम्यगिति तैः प्रार्थितो भृगुः ॥ ११ ॥
सत्यलोकं जगामादौ ब्रह्मणोऽन्तिकमादरात् ।
मुहूर्तं स्थितवान् द्वारि न प्राप्तस्तस्य दर्शनम् ॥ १२ ॥
रजोगुणस्समुद्रिक्तः लोकस्सृष्ट्युन्मुखस्थितः ।
ततो भृगुः शशापाजं पूजार्हो न भविष्यति ॥ १३ ॥
यस्मान्मां द्वारि संप्राप्तं न विचारितवानिति ।
कैलासशिखरं गत्वा रुद्रं संहारकारिणम् ॥ १४ ॥
द्रष्टुं मुहूर्तं स्थितवान् द्वारितस्य महामुनिः ।
पार्वती सहितः शंभुः न विचारितवान् मुनिम् ॥ १५ ॥

---

அறியத்தக்கது என்று ரிஷிகளாலே ப்ரார்த்திக்கப்பட்டு, ப்ருகு மஹரிஷியானவர் ஸத்யலோகத்தில் பிரம்மாவினுடைய ஸமீபத்திற்குப் போனார். அந்த ப்ரம்மாவினுடைய வாசலில் முஹூர்த்த மாத்திரம் அவருடைய தாசனம் கிடைக்காமல் நின்றார்? அந்த ப்ரம்மாவானவர் ரஜோகுண ஸமுத்ரிக்தராய், லோகஸ்ருஷ்டியில் உன்முகராயிருந்தார். பிறகு ப்ருகுவானவர் பிரம்மாவைப்பார்த்து உமக்குப் பூஜார்ஹதை யில்லாமல் போகக்கடவதென்று சபித்தார். யாதொரு காரணத்தாலே வாசலில் இருக்கிற என்னை விசாரியாமல் இருந்தீரோ அதனால். அனந்தரம் கைலாஸ பர்வதத்தில் போய்,

ஸம்ஹார கர்த்தாவான ருத்திரனைக்காண மென்று [illegible]த்திலே, முஹூர்தம் மாத்திரம் நின்றார். ருத்திரன் பார்வதீ ஸமேதனாய், ப்ருகு மஹாமுனியை விசாரியாம

ततो मुनिवरः क्रुद्धः शशाप पुर वैरिणं ।
तमोगुण समुद्रिक्तः योनिलिङ्गस्वरूपतां ॥ १६ ॥
प्राप्तवान् तामसैः पूजां त्वत्सालोक्यं प्रदास्यसि ॥ १७ ॥
इति शप्त्वा भृगुः तस्मात् क्षीरार्णवमुपेयिवान् ।
तत्र श्री भूमिनीलाभिः समेतं शेषशायिनम् ॥ १७ ॥
सेवितुं द्वारपालाभ्यां अनुज्ञातो विवेकुशः । (विवेश•सः)
प्रविश्यान्तः पदा रुष्टः ताडयामास माधवं ॥ १८ ॥
तस्मिन् क्षणे रमाद्यास्तास्त्वन्तर्धानं गतास्त्रियः ।
भगवान् तस्य च मुदा पादौ स्पृष्ट्वा भृगोर्मुनेः ॥ १९ ॥
धन्योऽहं कृतकृत्योऽहं भगवद्दर्शनादिह ।
सुदूरमागतोऽसि त्वं ज्ञातस्ते विश्रमो मुने ॥ २० ॥

---

விருந்தார். அனந்தரம் முனிசிரேஷ்டரான பிருகுவானவர் கோபித்தவருய்க் கொண்டு, புரவைரியான ருத்திரனைச் சபித்தார். அதாவது தமோகுண யுக்தராய், யோனி லிங்கக ஸ்வரூபத்தை யடைந்தவராய், தாமஸர்களாலே •பூஜிக்கப்பட்டவருய், உம்முடைய ஸாலோக்யத்தைக் கொடுக்கப் போகிறீரென்று. பிறகு அந்த கைலாஸத்தில் நின்றும், பாற்கடலைக் குறித்துப்போனுர். அந்தத்திருப் பாற்கடலிலே ஸ்ரீ பூமி நீளாதேவிகளோடு கூட திருவனந்தாழ் வான்மேலே கண்வளர்ந்து கொண்டிருக்கிற ஸ்வாமியை ஸேவிக்க வேணுமென்று த்வார பாலர்களாலே அனுமதி பண்ணப்பட்டு உள்ளே ப்ரவேசித்தார். கோபத்தோடே கூடினவராய் யோகநித்ரை செய்தருளுகிற ஸ்ரீய:பதியை காலாலே உதைத்தார்.

इति संपूज्य वचसा पादौ संवाह्य सादरं ॥ २१ ॥

तदङ्गुष्ठ दशं लुप्त्वा नखेनाश्चर्यवैभवं ।

वञ्चयामास बहुशो मुनिं भृगुमुखायतः ॥ २२ ॥

भृगुः —

संसेव्य भगवद्रूपं तेजसां राशिमूर्जितम् ।

निरस्तहेयगुणकं कल्याणगुणसागरम् ॥ २३ ॥

அந்தக்ஷணத்திலே பெரிய பிராட்டியார் முதலிய நாச்சிமார்கள் அந்தர்த்தான மானார்கள். பகவானானவர் அந்த ப்ருகு மகாமுனிவருடைய திருவடிகளைப் பிடித்துக் கொண்டு ஸந்தோஷத்தோடு தன்யனானேன், க்ருதகிருத்யனானே னென்று அருளிச்செய்து அந்த ப்ருகுவைப் பார்த்து வெகுதூரம் வந்தீர், ஆயாஸமாய் விட்டது யென்று வஞ்சித்து பூஜா வாக்யங்களாலே அவர் பாதங்களைப் பிடித்து,

அந்த ரிஷியினுடைய அங்குஷ்ட நேத்திரத்தை நகத்தினாலே கிள்ளி ஆச்சரிய வைபவரான பகவான் உபாயத்தினாலே பஹுவாய் பூஜித்தார். ப்ருகுவானவர், தேஜஸ்ஸுக்களுடைய ஸமூஹமாய் ஊர்ஜிதமான பகவத் ரூபத்தை ஸேவித்து, ஹேயகுண ரஹிதமாய், கல்யாணகுண பரிபூர்ணமாய், ஸத்வகுண ப்ரதானமாய், நிர்மலமாய், "सदा पश्यन्ति सूरयः" என்கிறபடியே, ஸத் புருஷர்களாலே ஸர்வகாலத்திலும் ஸேவிக்கப்பட்டும், நித்யராலேயும் முக்தராலேயும் தேவச்ரேஷ்டர்களான பிரம்மாதிகளாலேயும் ஸேவிக்கப்பட்டிருக்கிற பகவா

सर्वप्रधानममलं सात्विकैः पूजितं सदा ।
नित्यमुक्तैरविरतं सेवितं सुरसत्तमैः ॥ २४ ॥
सत्यं सत्यमिति भुजावुद्धृत्य चोक्तवान् ।
वेदान्मुख्य प्रमाणंभू न मुख्यो नारायणान्नहि ।
इति तस्य च पारम्यं प्रकाश्य जगतीतले ॥ २६ ॥
मुनीनामपि सर्वेषां देवानां सदसि प्रभोः ।
विष्णोः परत्वमपि च तयोस्तच्छेषतामपि ॥ २७ ॥
प्रकटीकृत्य तपसे ययौ भृगुमहामुनिः ।
दासौ जयं च विजयमाहूय भगवान् हरिः
युवां महापराधेन शत्रूस्यातां ममाधुना ॥ २८ ॥

னுடைய திவ்ய ஸ்வரூபத்தை நன்றாக ஸேவித்து கையை உயரத்தில் தூக்கிக்கொண்டு, முக்காலத்திலும் ஸத்யமாகச் சொல்கிறேன்.

வேதங்களைக் காட்டிலும் ப்ரமாண மில்லை. ஸ்ரீமன்-நாராயணனைக் காட்டிலும் பரதேவதையில்லை என்று சொல்லி அவருடைய பரத்வத்தை பூமியில் பிரகாசிப்பித்து ஸமஸ்தமான ரிஷிகளுடையவும் தேவதைகளுடையவும் ஸதஸ்ஸிலும் ப்ரபுவான விஷ்ணுவினுடைய பரத்வத்தையும் மற்றிரண்டு பிரம்ம ருத்திராதிகளுடைய சேஷத்வத்தையும் பிரகடனம் பண்ணி ப்ருகுவானவர் தபஸ்ஸின் பொருட்டுப் போனார்.

பகவானான விஷ்ணுவானவர் த்வாரபாலாளான ஜய விஜயாள் இரண்டுபேரையும் அழைத்து நீங்கள் இரண்டு பேரும் மஹாபராதம்பண்ணினீர்கள். இப்பொழுது எனக்குச் சத்ருக்களாவீர்கள்.

प्राप्तौ जन्मत्रयं भूम्यां निहतौ च मया रणे ।
पुनर्मित्रौ च भवतात् मत्सान्निध्यमुपेयुषौ ॥ २९ ॥
एवं तदाज्ञया लोके जातौ दैत्याधिपौ च तौ ।
हिरण्याक्षश्चाग्रजस्तु हिरण्यकशिपुस्ततः ॥ ३० ॥
भूत्वा तौ मानुषौ लोके विश्रुतौ लोककण्टकौ ।
हिरण्याक्षो महीं कृत्स्नां कटवत्संप्रगृह्य च ॥ ३१ ॥
गत्वा पाताल लोके च सन्निरुध्य वसुंधरां ।
यथेच्छया संचरन् स गूढोऽभूद्दैत्यनायक : ।

---

பூலோகத்தில் மூன்று ஜன்மத்தை எடுத்து சத்ருக்களாய் யுத்தத்திலென்னாலே ஸம்ஹரிக்கப்பட்டவர்களாய், திரும்பவும் என்னுடைய, ஸந்நிதியில் வந்து மித்ரர்களாகக் கடவீர்கள். இப்படி பகவானுடைய ஆக்ஞையினால் அவர்கள் தைத்யாதிபதிகளாய் பூமியில் பிறந்தார்கள். ஹிரண்யாக்ஷன் அக்ரஜனையும் (மூத்தவன்) ஹிரண்யகசிபு அனுஜனையும் (தம்பி) பிறந்தார்கள். இந்தப்படி மனுஷ்ய லோகத்தில் ப்ரஸித்தராளாய், லோகோபத்திரவம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அந்த ஹிரண்யனானவன் ஸமக்ரமான பூமியை பாய்போல் சுருட்டி எடுத்துக்கொணடு பாதாள லோகத்தில் போய் பூதேவியை நிரோதித்து யதேச்சையாய் **கூட** மாய் ஸஞ்சரித்துக் கொண்டிருந்தான். பிறகு ஸகலலோக பாலகர்களும், பிரம்மாவை சரணமடைந்தார்கள். பிர்மாவானவர் தேவதைகளோடுகூட ஸ்ரீமன்-நாராயணனை சரணமடைந்தார். பிறகு ஸ்ரீய:பதியான நாராயணன் ஒருவராலும் கிட்டக்கூடாதவனாய் வராஹாவதாரம் செய்தருளி பாதா

ततो लोकेश्वराः सर्वे ब्रह्माणं शरणं गताः ॥ ३२ ॥

ब्रह्मा सदैवतगणः नारायणमुपागमत् ।
ततो नारायणः श्रीमान् वराहोऽभूद्दुरासदः ॥ ३३ ॥

प्रविश्यपाताल-तलेवसन्तं हत्वा हिरण्यं पृथिवीं हरन्तं ।
हत्वा स्वदंष्ट्रेण वसुंधरां तां संवेश्यभूमिं पुनराजगाम ॥ ३४ ॥

तदुग्र-रूपं प्रसभीक्ष्य देवाः
स्थातुं न शक्ता दिवियातुधानाः ।
श्रियं च देवीं जगतां धरित्रीं
प्रापुः शरण्यां शरणागतानां ॥ ३५ ॥

ளத்தில் ப்ரவேசித்து பூமியை அபஹரித்துக் கொண்டு பாதாளத்தில் வாஸம் பண்ணிக் கொண்டிருக்கிற ஹிரண்யாக்ஷனை ஸம்ஹரித்து அத்யுக்ர கோபராய் எழுந்தருளி யிருந்தார். தேவதை களெல்லாம் அந்த அந்த உக்ரரூபத்தை ஸேவிக்க மாட்டாமல் ஸ்வர்கத்திலே இருக்கமாட்டாமல் போனார்கள். எல்லோரும் லோக மாதாவாய் ஸர்வலோக ரக்ஷகையான ஸ்ரீ தேவியை சரண மடைந்தார்கள். தேவதைகள் அந்த லக்ஷ்மியை ஸேவித்து, ஹேதேவி, தேவரீருடைய நாயகனை ஸர்வேச்வரனுடைய கோபத்தை சமிப்பிக்க வேணுமென்று ப்ரார்த்தித்தார்கள், இந்தப்ரகாரம் அந்தத் தேவதைகளால் ப்ரார்த்திக்கப்பட்டவளாய், புன்சிறிப்போடு கூடின திருமுக மண்டலத்தை யுடைத்தானவளாய் அந்த வராஹ ரூபியான பகவானுடைய முன்னே எழுந்தருளி நின்று

तां वीक्ष्य सर्वेश्वरि तावकीन-
पतेः सुकोपं शमयस्व देवि ।
इति संप्रार्थ्यमाना तैः सस्मितानन पङ्कजा ॥ ३६ ॥
गत्वा तदग्रतस्थित्वा मोहयामास लीलया ।
स वराहस्तु तत्कोपं विहाय मृदुतां गतः ॥ ३७ ॥

**इति श्री ब्रह्माण्डपुराणे अर्चावतारस्थलवैभवकथने विष्णुचित्त मरीचिसंवादे पद्मगिरिमाहात्म्ये तृतीयोऽध्यायः ॥**

*தன்னுடைய விலாஸ வீக்ஷணாதிகளாலே மோஹிப்பித்தாள். அந்த வராஹ ரூபியானவர் அந்தக் கோபத்தை க்ஷமித்து சாந்தத்தை அடைந்தார்.*

*பிரம்மாண்ட புராணத்தில் அர்ச்சாவதாரப் பெருமையைக் கூறுவதான விஷ்ணு சித்தர் மரீசி இவர்களுடைய ஸம்வாதத்தில் பத்மகிரி மாகாத்ம்யத்தில் மூன்றும் அத்யாயம் முற்றிற்று.*

# तुरीयोध्यायः प्रारम्भः

हिरण्यकशिपुश्चापि अतिदुर्मानितां गतः ।
इन्द्रादि लोकपालानां स्थानान्याक्रम्य भूतले ॥ १ ॥

भूसुरान् भूभुजान् हत्वा देशानाक्रम्य चौजसा ।
देवानां च हविर्भागान् स्वयं गृह्णन्निगृह्य च ॥ २ ॥

इन्द्रोऽहं वासुदेवोऽहं ब्रह्माहं रुद्र एव च ।
इति लोकेषु संघुष्यन् विचचार समाः शतम् ॥ ३ ॥

ततः तस्य सुता जाताः ह्लादसंह्लादपूर्वकाः ।
तेषां मध्ये महाभागः प्रह्लादो नाम बालकः ॥ ४ ॥

जातमात्रो भगवतः कटाक्षेणाभिरक्षितः ।
सात्विकस्तत्पदांभोजमकरंदमधुव्रतः ॥ ५ ॥

ஹிரண்யகசிபுவானவன அத்யந்தம் துர்மானியாய் இந்திரலோகங்களை எல்லாமாக்ரமித்து பூலோகத்திலும், பிராமணர்களையும் ராஜாக்களையும் திக்கரித்து தேவதைகளுடைய ஹவிர்பாகங்களை க்ருஹித்து நானே இந்திரன், வாஸுதேவன், பிர்மா, சிவன், என்று கோஷித்துக் கொண்டு வெகுகாலம் திரிந்தான். அதற்குப் பிறகு அவனுக்கு ஹ்லாதன், ஸம்ஹ்லாதன், அனுஹ்லாதன், பிரஹ்லாதன் என்று நான்கு பிள்ளைகள் பிறந்தனர். அந்த நாலு பேருக்குள்ளே மஹானுபாவனுன பிரஹ்லாதன் பிறக்கும் பொழுதே பகவானுடைய கடாக்ஷத்திலுலே கடாக்ஷிக்கப் பட்டவராய, ஸத்வகுண ப்ரதானராய். பகவானுடைய திருவடிகளிலே ப்ரவஹிக்கிற தேனுக்கு

पित्रा शुक्राचार्यभवने निक्षिप्तोऽक्षरसंग्रहे ।
गुरुणा शिक्षितो बालो हिरण्याय नमोऽस्त्विति ॥ ६ ॥

एवं हि गुरुणा बालः शिक्षितोऽपि पुनः पुनः ॥
नारायणाय नम इत्येव अभ्यस्तवान् तदा ॥ ७ ॥

ततो गुरु गृहाद्बालं आनाय्य सगुरुं पिता ।
किमपाठीति तं बालं पृष्टवान् स मुदायुतः ॥ ८ ॥

नमो नारायणायेति प्रोक्तवानव्ययो गुरुः ।
तदधीतं मया सम्यक् य आस्ते मम चेतसि ॥ ९ ॥

अतिक्रुद्धोऽभवद्दैत्यः गुरुसंतर्ज्यबालकं ।
सर्पादिभिः क्रूरदंष्ट्रैः गजैर्मदजलोद्धतैः ॥ १० ॥

வண்டாய்', தகப்பனால் சுக்ராசார்ய கிருஹத்தில், அக்ஷ ராப்யாஸ நிமித்தமாக வைக்கப்பட்டவனாய், பாலனான ப்ரஹ்லாதன் குருவினாலே ஹிரண்யாய நமோஸ்து என்று சிக்ஷிக்கப்பட்டார். இப்படி சிக்ஷிக்கப்பட்டாலும் அடிக்கடி "ஓம் நமோ நாராயணாய", என்று தானே அப்யஸித்தார். பிறகு பிதாவானவன் அந்தபாலனை ஆசிரியர் வீட்டினின்றும், குருவோடுகூட அழைப்பித்து பையனே என்ன படித்தாய் என்று கேட்டான்? யாதொரு குரு என் ஹ்ருதயத்திலே வாஸம் பண்ணுகிறாரோ அந்த அவ்யயரான குரு, "நமோ நாராயணாய"என்று சொல்லி வைத்தார். அது நன்றாக அப்யஸிக்கப்பட்டது என்று சொன்னார்.

அதைக்கேட்டு தைத்யன் ரொம்பவும் கோபமுள்ளவனாய், அந்த குருவையும் பாலனையும் மிரட்டி க்ரூரமான

विषमिश्रैः भोजनैश्च भटैरुग्रै र्घृतायुधैः ।
भीषयामास तं बालं सबालो न चचालह ॥ ११ ॥

अभिभूयमाना व्यसनैः यथाऽधोक्षजचेतसः ।
गिरयो वर्षधाराभिः हन्यमानात (थ) विव्यथुः ॥ १२ ॥

एवं ध्यायन्महात्मानं तद्गतेनान्तरात्मना ।
न चचाल पितुः पापं चिन्तयानो महामतिः ॥ १३ ॥

पुनरानीय तं बालं केनैवं शिक्षितोह्यसि ।
कोवानारायणो देवः दैत्येन्द्रेमयि संस्थिते ॥ १४ ॥

பற்களையுடைய ஸர்ப்பம் முதலிய துஷ்ட ஜந்துக்களாலே யும், மதத்தினுல் கர்வித்த யானைகளாலேயும், விஷமிச்ர மான அன்னங்களாலேயும், உக்ராளாய், ஆயுதபாணி களான படர்களாலேயும அந்தப் பாலனை தர்ஜனம பண்ணி ஹிம்ஸித்தான். அந்தப் பாலனுனவன் கொஞ்ச மும் சலிக்கவில்லை. பர்வதங்கள் வர்ஷதாரைகளால், எப் படிச்சலியாதோ, பகவத்யானபரர்கள வ்யஸனங்களாலே எப்படிச்சலியார்களோ, அப்படி இந்த ப்ரஹ்லாதனும், தைத்ய பதியினுல் மிரட்டப்பட்டாலும் சலிக்கவில்லை. இப்படி பகவானைத்யானம் பண்ணிக்கொண்டு பகவானி டத்தில் வைக்கப்பட்ட ஹிருதயத்தையுடைத்தானவருய் சலியாமல் மஹாமதியான பிரஹ்லாதர் தகப்பனுருடைய பாபத்தைச் சிந்தித்தார்.

திரும்பவும் அந்தப் பாலனை அழைத்து, யாரால் இப் படி சிக்ஷிக்கப்பட்டாய், நாராயணன்யார்?தைத்யபதியான நான் இருக்கும் பொழுது நாராயணன் என்ற துஷ்டாத்மா எவ்விடத்தில் வாஸம் பண்ணுகிருனென்று கேழ்க்கவே

क्व वा वसति दुष्टात्मा नारायण इतीरितः ।
इति पृष्टस्स दैत्येन बालकः प्रहसन्निव ॥ १५ ॥
नारायणात्परो नास्ति लोके स्रष्टाच पालकः ।
संहर्ता च स्वयं स्रष्टा भर्ता संहारकः तथा ॥ १६ ॥
व्याजमात्रं तु तौ देवौ सृष्टि संहारकर्मसु ।
सर्वत्रासौ समस्तं च वसत्यस्मिन् यथा सुखं ॥ १७ ॥
तस्मात्वा वासुदेवेति प्रोच्यते मुनिसत्तमै :
मयि त्वयि च भूतेषु स्थावरेषु चरेष्वपि ॥ १८ ॥
वसत्यप्राकृतवपुः कल्याणगुण भाजनः ।
एव मुक्तस्तु बालेन क्रुद्धः संजातपौरुषः ॥ १९ ॥

*அந்தப் பாலனானவன் இப்படி தைத்யேந்திரனாலே கேழ்க்கப்பட்டவனாய் சிரித்துக் கொண்டு லோகத்தில் நாராயணனை விட்டு வேறு ஸ்ரஷ்டாவும், ரக்ஷகனும், ஸம்ஹர்தாவுமில்லை, ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரகர்த்தா, அவரேயல்லாமல் வேறில்லை. அந்த ப்ரம்மருத்திராள் இரண்டு பேரும் வ்யாஜமாத்ரம் தான், அந்தப் பகவான் எங்கும் எழுந்தருளியிருக்கிறார். ஸர்வமும் அந்தப் பகவானிடத்தில் ஸுகமாய் வாஸம் பண்ணுகிறது.*

*ஆகையால் ரிஷிஸ்ரேஷ்டர்களே, வாஸுதேவன் என்று சொல்லப்படுகிறார். உன்னிடத்திலேயும் என்னிடத்திலேயும் ஸ்தாவரஜங்கமாத்மகங்களான ஸகல பூதங்களிலேயும், அப்ராகிருத திவ்ய மங்களவிக்ரஹ ரூபத்தையுடையவராய் அகில கல்யாண குணங்களுக்கும் ஆதாரமாய் வாஸம் பண்ணுகிறார். இந்தப்ரகாரம் பையனால்*

ताडयामास हस्तेन स्थूणमग्रे व्यवस्थितं ।
ततः खे समभूच्छब्दः मोहयन् सर्वदेवताः ॥ २० ॥
भूमिकंपः समभवत् दिशः सर्वाश्चकंपिरे ।
ततो हठात्समुद्भूतः ज्वालामाली महद्रुषा ॥ २१ ॥
सिंहस्कंधः पृथुग्रीवः सिंहास्यः तीक्ष्णदंष्ट्रवान् ।
विशालवक्षाः तेजस्वी युक्तः षोडशबाहुभिः ॥ २२ ॥
शंखचक्रगदाखड्ग शूलशक्तिर्धनुर्धरैः ।
चर्मपट्टासि कुन्ताद्य दण्डास्य परमायुधैः ॥ २३ ॥
द्वाभ्यां कराभ्यां तं गृह्य द्वाभ्यां तद्दैत्य वक्षसं ।
खरैश्च नखरैः भित्वा चांद्रमालां वहन् गले ॥ २४ ॥

சொல்லப்பட்டவனாய், மஹாகோபத்தை யுடையவனாய், பௌருஷமுண்டானவனாய், எதிரில் இருக்கிறதூணைகையினால் அடித்தான். அதற்குப்பிறகு ஆகாசத்தில் ஸகலதேவதைகளும் மோஹிக்கும்படி பண்ணிக்கொண்டு சப்தமும் பூகம்பமும் உண்டாகிவிட்டது. திக்குகளெல்லாம் நடுங்கிற்று. அப்பொழுது ஜ்வாலாமாலியாய் ஸிம்மத்தினுடைய தோளைப் போலொத்த தோளையுடையவராய், அகந்த திருப்பவள(வாயை)த்தை யுடைத்தானவராய், தீக்ஷ்ணமான தந்தங்களையுடையவராய் பதினாறு கைகளை யுடையவராய் சங்க சக்ரம் முதலான ஆயுதங்களை யுடையவராய் மஹா கோபத்தோடு ஆவிர்ப்பவித்து, இரண்டு கைகளால் தைத்யனைப் பிடித்து, அவனுடைய வக்ஷஸ்ஸை, தீக்ஷ்ணமான நகங்களையுடைய இரண்டு திருக்கைகளாலும் பிளந்து, ஆர்த்ர மாலையை கழுத்தில்

जज्वाल कोटिसूर्याभः ज्वाला नरहरिः क्षणात् ।
ततो देवाः स गन्धर्वा ववर्षुः पुष्पवृष्टिभिः ॥ २५ ॥

तुष्टुवू ऋषयस्सर्वे देवाः साग्निपुरोगमाः ।
जय जय जगदीश ब्रह्मेन्द्र रुद्रादि वन्द्य प्रभो ॥ २६ ॥

जय जय भवसिन्धु मग्नात्म संतारक श्रीपते ।
जय जय नतलोक सन्ताप हारिन् क्षमांभोनिधे ॥ २७ ॥

जय जय परमाप्त दैत्यात्मज प्राणबंधो नमः ।
एवं स्तुत्वा ऋषिगणाः देवाः कालाग्नितेजसं ॥ २८ ॥

दुष्प्रेक्षं सर्वजन्तूनां दुर्ज्ञेयमपि योगिनां ।
आसादितुमशक्ताः तं लक्ष्मी सांनिध्यमिच्छवः ॥ २९ ॥

போட்டுக்கொண்டு ஜ்வாலா நரஸிம்மனானவர், கோடி ஸூர்யனுக்கு ஸமமான காந்தியை யுடைத்தானவராய், தத்க்ஷணத்திலே ஆவிர்ப்பவித்தார். தேவதைகளும் கந்தர்வர்களும் புஷ்பவர்ஷம் வர்ஷித்தார்கள். ரிஷிகள் ஸ்தோத்ரம் பண்ணினார்கள். அக்னிமுதலான ஸகல தேவதைகளும் ஸ்தோத்ரம் பண்ணினார்கள். ஜகத்துக்கெல்லாம் ஸ்வாமியாய், பிரம்மருத்ரேந்திராதிகளாலே, ஸேவிக்கப்பட்ட பிரபுவே, ஜயஜய, ஸம்ஸார ஸமுத்திரத்திலே, மக்னரான ஆத்மாக்களை, கரையேத்துகிறவரான ஸ்ரீயஃபதியானவரே, ஜய, ஜய, ஆச்ரித ஜனங்களுடைய, ஸந்தாபத்தை ஹரிக்கிறவரே, க்ஷமாகுண ஸாகரமே ஜய ஜய, பரமபாகவதரான பிரஹ்லாதருடைய ரக்ஷணத்தில் பந்துவானவரே ஜய ஜய, என்று மெதண்டன் ஸமர்பிக்கிறேனென்று, இந்தப் பிரகாரமாக ரிஷிகளும் தேவதை

लक्ष्मीं शरणमापन्ना उग्रकोपप्रशांतये ।
साच ज्ञात्वा दुराधर्ष कोपं शमयितुं पतेः ॥ ३० ॥

समीपमुपसंगम्य स्थिता कारुण्यरूपिणी ।
तां वीक्ष्य करुणांभोधिः शांतकोपोऽभवद्धरिः ॥ ३१ ॥

ततः सर्वे समागम्य तुष्टुवुः नृहरिं मुदा ।
उद्धृत्य तां निधायांके तस्थौ सौम्यस्वरूपवान् ॥ ३२ ॥
एवं पद्मगिरौ चात्र सान्निध्यमकरोद्धरिः ।

களும், காலாக்னிரூபமான தேஜஸ்ஸையுடைய ஸ்வாமியை, ஸ்தோத்திரம் பண்ணி ஒருவராலேயும், காணக்கூடாதவராய் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ ந்ருஸிம்மனை அடுத்து நிற்பதற்கு (அணுகுவதற்கு) அசக்தாளாய், லக்ஷ்மீ ஸாந்நித்யத்தை பிரார்த்தித்துக் கொண்டு உக்ரமான கோபத்தை சமிப்பிக்கிறதின் பொருட்டு லக்ஷ்மியை சரணமடைந்தார்கள். அந்த லக்ஷ்மியானவள், தேவதைகளுடைய அபிப்பிராயத்தை யறிந்து, பர்த்தாவினுடைய கோபத்தை சமிப்பிக்கிற நிமித்தமாக, தயாஸ்வரூபியான லக்ஷ்மியானவள், ஸமீபத்தில் வந்து நின்றாள்.

க்ருபாநிதியான நரஸிம்மனானவர், அந்தலக்ஷ்மியை கடாக்ஷித்து, சாந்த கோபரானார். அனந்தரம் ஸமஸ்தமான தேவதைகளும் வந்து ஸ்தோத்ரம் பண்ணினார்கள். அந்த ந்ருஸிம்மரானவர் லக்ஷ்மியை எடுத்து துடையில் வைத்துக்கொண்டு ஸௌம்யராய் எழுந்தருளி யிருந்தார். இந்தப்ரகாரம் ஹரியானவர் பத்மகிரியில் அத்ரி மகாமுனிவருக்கு ஸேவை ஸாதித் தருளினார்.

निरवधिक गुणाढ्यैः श्री नृसिंहस्यदिव्य
वपुरनघमुपास्य प्राप्तवान् मोक्षमत्रिः ।
स तु कमलमहीध्रे प्राप्य नित्यं सपर्यां-
सकलमनुजनेत्रानंदपात्रं बभूव ॥ ३३ ॥

**इति श्री ब्रह्माण्डपुराणे अर्चावतारस्थवैभवकथने विष्णुचित्त मरीचिसंवादे पद्मगिरिमाहात्म्ये तुरीयोऽध्यायः**

---

அப்பொழுது அத்ரியானவர் நிரவதிககுண ஸமுத்திரமான லக்ஷ்மீ ந்ருஸிம்மனுடைய, திவ்யமங்கள விக்ரஹத்தை ஸேவித்து உபாஸனைபண்ணி மோக்ஷத்தையடைந்தார். அந்த ந்ருஸிம்மனவர் பத்மகிரியிலே நித்யமாய் ஆராதனம் கண்டருளி ஸமஸ்தமான மனுஷ்யாளுடைய கண்களுக்கு விஷயமாய் எழுந்தருளி யிருந்தார்.

பிரம்மாண்ட புராணத்தில் அர்ச்சாவதாரப் பெருமையைக்
கூறுவதான விஷ்ணு சித்தர் மரீசி இவர்களுடைய
ஸம்வாதத்தில் பத்மகிரி மாகாத்ம்யத்தில்
நான்காவது அத்யாயம் முற்றிற்று.

## पञ्चमोऽध्यायः प्रारंभः

**विष्णुचित्तः —**

लक्ष्मीनरहरेः सम्यक् वैभवं भवतः श्रुतं ।
त्रिवेण्या वैभवं त्वत्तः श्रोतुमिच्छामि सुव्रतः ॥ १ ॥

**मरीचिः —**

पुरा कश्चिन्महायोगी विष्णुभक्तो दृढव्रतः ।
कृष्णशर्मा कृतयुगे विष्णुपादाब्जसंभवाम् ॥ २ ॥
गंगां त्रिपथगां ध्यायन् प्रातरुत्थाय नित्यशः ।
यात्रा यात्रेति गंगायां गत्वा सप्तपदं पुनः ॥ ३ ॥
निवृत्य च वसत्यत्र सुदर्शन गिरौ मुनिः ।
तत्रैवान्यो मुनिः कश्चित् यमुनातीर संश्रयः ॥ ४ ॥

---

விஷ்ணுசித்தர்—கேழ்க்கிருர். வாரீர் ஸுவ்ரதரான மரீசியே, லக்ஷ்மீ ந்ருஸிம்மனுடைய வைபவமானது, தேவரீரிடத்தில் நின்றும், நன்ருய் கேழ்க்கப்பட்டது. த்ரிவேணியினுடைய வைபவத்தை தேவரீரிடத்தில் நின்றும் கேழ்க்க வேணுமென்று இச்சிக்கிறேன், என்று கேழ்க்கவே, மரீசியானவர், அருளிச் செய்கிருர். பூர்வ காலத்திலே த்ருடவ்ரதராய், விஷ்ணு பக்தரான க்ருஷ்ண சர்மாவென்கிற யோகியானவர், விஷ்ணு பாதாப்ஜஸம்பவையாயும் த்ரிபதகையுமான கங்கையை த்யானம் பண்ணிக்கொண்டு பிராத: காலத்தில் நித்யம் எழுந் திருந்து கங்காயாத்திரை கங்காயத்திரை என்று ஏழு அடிபோய் திரும்பி இந்த ஸுதர்சன கிரியிலே வாஸம் பண்ணினர். அங்கே அந்த யமுனு கங்கை இரண்டு நதிகளும்கூட எப்பொழுது ஆவிர்ப் பவித்தார்களோ

नित्यं च यमुनातीर्थ पानेनैव विवर्धितः ।
ध्यायन् तामेव तटिनीं स्नानकाले दिने दिने ॥ ५ ॥

निवासमकरोत्तत्र सुदर्शनगिरौ तथा ।
तत्राविरास्तां ते गंगा यमुना संगते यदा ॥ ६ ॥

तदा सरस्वतीचापि ख्याता वेगापगेति च ।
ताभ्यां च संगताह्यासीत् केनचित् कारणेन च ॥ ७ ॥

एतास्तिस्रस्तटिन्यस्ताः समेताः सागरं गमाः ।
सुदर्शनगिरेश्चापि पद्माख्यस्य गिरेस्तथा ॥ ८ ॥

मध्ये प्रवृत्ताः शुभदाः प्रयागाख्ये यथा तथा ।
गंगा च यमुना चैव तटिनी च सरस्वती ॥ ९ ॥

समेत्य सर्वलोकस्य सर्वपापविमुक्तये ।
सर्वाभीष्टं प्रयच्छन्ति तत्र देहं विमुञ्चतां ॥ १० ॥

அப்பொழுது ஸரஸ்வதியும வேகவதியென்று பெயரை உடைத்தானவளாய் காரணாந்தரத்தினால் அந்த இரண்டு நதிகளோடும் கூடினவளானாள். அப்படிப்பட்ட இந்த கங்கை யமுனை ஸரஸ்வதி, மூன்று பேர்களும் கூடி க்ஷீரநதி, பாஹூநதி, வேகவதிகளாய், ஸமுத்திரகாமிகளாய், ஸூதர்சனகிரிக்கும் நடுவில், ப்ரயாகையில் கங்கை, யமுனை, ஸரஸ்வதி மூன்று நதிகளும் கூடி ஸகலஜனங்களுடைய, ஸகலபாப விமுக்தியின் பொருட்டு எப்படி ப்ரவஹிக்கிரார்களோ அப்படி ப்ரவஹிக்கிறார்கள். அந்த ப்ரயாகையில் சரீரத்யாகம் பண்ணுகிறவர்களுக்கு எப்படி அபீஷ்டார்த்தங்களைக் கொடுக்கிறார்களோ, அப்படி

तास्त्रिवेण्या यथा सर्वलोकैरपि सुपूजिता ।
तथैव दाक्षिणात्यानां पूजनीया विशेषतः ॥ ११ ॥
तासां च संगमे स्नानात् यत् फलं लभ्यते नरैः ।
ततः शतगुणंह्यत्र लभन्ते पुरुषाः फलम् ॥ १२ ॥
यस्माद्वेंकटनायको नरहरि र्लक्ष्म्या समेतौ च तौ,
तत्तीरोभयपार्श्वतश्च दिविजैः देवैर्महीपालकैः ।
सर्वैर्देशिकवर्यभूसुरवरैः संसेवितौ सर्वदा,
सांनिध्यं च करिष्यतः कलियुगे तीरे त्रिवेण्याः शुभे॥१३॥

---

இந்த நதிகளும அபீஷ்டத்தைக் கொடுப்பார்கள. அந்த த்ரிவேணீ ஸங்கமம் எப்படி ஸகல லோகங்களாலேயும் பூஜிக்கப்படுகிறதோ, அப்படி தக்ஷிணதேசத்து ஜனங்களுக்கெல்லாம் விசேஷித்து இந்த த்ரிவேணீ பூஜிக்கத் தகுந்தது.

மனுஷ்யர்கள் அந்த த்ரிவேணீ ஸங்கமத்தில் ஸ்நானம் பண்ணி எந்த பலத்தையடைவார்களோ? அதைக் காட்டிலும், சதகுணமான பலத்தை இந்த த்ரிவேணியில் ஸ்நாநம் பண்ணுகிறவர்கள் அடைவார்கள்.

யாதொரு காரணத்தினாலே திருவேங்கிடமுடையானும் லக்ஷ்மீ ந்ருஸிம்மனும் லக்ஷ்மியோடு கூட அந்த த்ரிவேணியினுடைய உபயபார்ச்வத்திலும், ஸ்வர்கத்திலிருக்கிறதேவதைகளாலும், பூபாலர்களான ராஜாக்களாலும், ஸமஸ்தமான பூஸுரச்ரேஷ்டர்களான ஆசார்ய புருஷர்களாலேயும், ஸதா ஸேவிக்கப்பட்டவர்களாய் கலியுகத்தில் த்ரிவேணீயினுடைய தீரத்தில் ஸாந்நித்யம் செய்தருளப் போகிறார்களோ, யாதொரு காரணத்தினால்

यस्माद्धस्तिगिरीश्वरोऽपि मकरं याते च भानौ गिरौ ।
पद्माख्ये महतीं श्रियं च जगतां कुर्वन् त्रिवेण्यास्तटे ।
आखेरोत्सवमद्भुतं त्रिजगतां आनंददं सन्ततं ।
पश्यद्भिर्दिविदेवतैः विजयते भूपालकैः भूसुरैः ॥ १४ ॥

यस्मिन्महोत्सववरे करिशैलभर्तुः
यानैर्गजैः च तुरगैरपि गोरथैश्च ॥
सस्त्रीकपुंभिरपिबालक वृद्धसंघैः
संपूरिता वसुमती परितो गिरेश्च ॥ १५ ॥

स्त्रीभिः सुवर्णवसनाद्भुत भूषणाभिः
पुंभिर्महार्घ वसनैर्धृत भूषणैश्च ॥
विद्वद्भिरुद्धतवचोभिरुदारचर्यैः
आचार्यपूरुषवरैः यतिभिश्च दान्तैः ॥ १६ ॥

---

ஹஸ்திகிரி நாதனும் சூர்யன் மகரராசியை அடைந்தவளவில் ஜனங்களுக்கெல்லாம் மஹத்தான ஸம்பத்தை யுண்டாக்குகிறவருய், த்ரிவேணி தடத்தில் பத்மகிரியில் ஆச்சர்யகரமாய் ஜனங்களுக்கெல்லாம் ஸந்தோஷத்தைக் கொடுக்கிற திருப்பாரி வேட்டை யுத்ஸவத்தை ஸேவிக்கிற ஆகாசத்திலுள்ள தேவதைகளாலும், பூமியிலுள்ள ராஜாக்களாலும், பூதேவதைகளாலேயும்விளங்குகிறாரோ யாதொரு மஹோத்ஸவத்தில் ராஜ்யாதிபதிகளுடைய, பல்லக்குகளாலேயும், யானைகளாலும், கோரதங்களாலும், ஸ்திரீகளோடு கூடின புருஷர்களாலேயும், பாலவிருத்தர்களாலேயும் அந்தப் பத்மகிரியினுடைய நாலுபக்கங்களிலேயும், பூமியானது நிறைந்திருக்கிறது. ஸுவர்ண

विस्मृत्य तापमखिलं विविधौ धनाढ्य-
नैवेदनं भगवतः करिशैलधाम्नः ।
संगृह्य तादृशरसं तटिनीप्रवाहं
आसाद्य बांधवजनैस्सह भक्षयन्ति ॥ १७ ॥

सर्वे जनाः सहवधूभिरपीच्यरूपाः
शृंगारशास्त्रनिपुणाः सुमनोभिरामाः ।
गंधैर्वरैर्घनरसांचित वीटिकाभिः
आनंदनिर्भरजना दिवि देववत् स्युः ॥ १८ ॥

तादृङ्महोत्सववरेण विराजमानं,
श्रीवेंकटेशनरसिंह कटाक्षपूतम् ।
तद्भक्तसंगममहाविभवेन युक्तम्,
भाति स्म संगममिदं जगति त्रिवेण्याः ॥ १९ ॥

மயமான வஸ்திரங்களாலேயும், அத்புதமான பூஷணங்களாலேயும் அநர்கமான வஸ்திராபரணாலங்கிருதாளான புருஷர்களாலேயும், வாக்மிகளான வித்வத் ஜனங்களாலேயும், உதாரகுணசாலிகளான ஆசார்ய புருஷர்களாலேயும், ஜிதேந்திரியர்களான யதிகளாலேயும், ஸகல தாபங்களையும் மறந்து கரிகிரிநாதன் அமுது செய்தருளின அப்ராகிருதரஸமான அனேகவிதமான ஓதனங்களையும், ஸங்க்ரஹித்துக் கொண்டு நதீப்ரவாஹ ஸமீபத்தில் பந்துக்களோடு கூட அமுது செய்தருளுகிறார்கள்.

ஸகல ஜனங்களும் ஸ்திரீகளோடு கூட நவவயஸ்ஸையுடைத்தானவர்களாய், ஸ்ருங்கார சாஸ்திர நிபுணர்களாய், புஷ்பங்களாலேயும், கந்தங்களாலேயும், அலங்

त्रिवेणी संगमे येतु मासमेकं निरंतरं ।
स्नानं कुर्वन्ति ते स्वर्गे पूज्यन्ते सर्वदेवतैः ॥ २० ॥
पुनः प्राप्ता जनिं लोके दिवि देवेन्द्रवत् स्थिताः ।
लब्ध्वा भक्तिं परां विष्णौ गच्छन्ति परमं पदं ॥ २१ ॥

तस्याश्चोत्तरभागविलसत् पद्माख्य भूभृद्वरे
दिव्यैः पुष्पफलद्रुमैः भहुविधैरानन्ददैः पश्यतां ।
तत्पुण्यैर्निपतद्भिरावृतमहीभागे नृसिंहांतिके
दिव्यौ पिप्पल भूरुहौ च सुभगौ सच्छायया शोभितौ ॥२२॥

இருதர்களாய், கற்பூரசூர்ண ஸஹிதமான தாம்பூலத்தை யுடைத்தானவர்களாய், ஆனந்தபரிதாளான ஜனங்கள் ஸ்வர்க்கத்தில் தேவதைகள் போல் ஸந்தோஷப்பட்ட போகிறார்கள். அப்படிப்பட்ட மஹோத்ஸவத்தைக் கண் டருளுகிற திருவேங்கிட முடையான், லக்ஷ்மீ ந்ருஸிம்மன் இவர் கடாக்ஷத்திற்கு பாத்ர பூதர்களான ததீயாளான பாகவத ஸம்ருத்தியினால், நிறைந்து மஹா வைபவத்தை யுடைத்தானதாய், த்ரிவேணீ ஸங்கமமானது பூலோகத் தில் விளங்குகிறது. த்ரிவேணீ ஸங்கமத்தில் எவர்கள் ஒரு மாஸம் ஸ்நாநம் பண்ணுகிறார்களோ? அவர்கள் ஸ்வர்க்கத்தில், ஸகல தேவதைகளாலும் பூஜிக்கப்படு வார்கள். அவர்கள் மறுபடி பூலோகத்தில் ஜனித்து ஸ்வர் கத்தில் தேவேந்திரன் போல், பூமியில் ஸ்ரீமன் நாராயண னிடத்தில் பரமமான பக்தியை யடைந்தவர்களாய், பரம பதத்தில் போய் நித்யஸூரிகளால் பூஜிக்கப்படுவார்கள்.

அந்த த்ரிவேணியினுடைய உத்ரபாகத்தில் விளங்கு கிற, தாமரைப் புஷ்பங்களால், சூழப்பட்டபர்வத ஸிரேஷ்

तन्मूले बहवो महीसुरवराः स्नात्वा तटिन्यां शुचौ
देशे तस्थुमुपस्थिताः प्रतिदिनं पूर्वाह्निके भान्ति हि ।
ध्यायन्तश्च रमानृसिंहममनघा वेदैश्चशास्त्रैश्शुभैः
वाग्भिः श्रीश पदांबुजैकनिरताः कालं नयन्तस्थिताः ॥२३॥

तत्पार्श्वे महती पुरी विजयते श्रीशब्द पूर्वाशुभा,
काञ्चीनायक सत्कटाक्षमहिमा संवर्धिता सद्वृता ।
श्रीरामानुज देशिक प्रभृतिभिः पूर्वैश्च संमानिता
वृक्षैः नित्यफलैश्च पुष्पभरितैः गुल्मैश्च संराजिता ॥ २४ ॥

டத்தில் திவ்யங்களான புஷ்பங்களாலேயும், பலங்களாலேயும், நிறைந்த, அனேகவிதமான விருக்ஷங்களாலேயும் நிறைந்தும், ஸேவிக்கிறவர்களுக்கு ஆனந்தப்ரதமாய் அந்த மரங்கள் நின்றும், உதிர்ந்திருக்கிற புஷ்பங்களால் நிறைந்து பூபாகத்தில் ந்ருஸிம்மனுடைய ஸமீபத்தில், நல்ல நிழல்களை யுடைத்தானதுகளாய் அழகாய் இரண்டு திருவரசுகளுண்டு. அதனடியில் அனேக ப்ராம்மண சிரேஷ்டர்கள் நதியில் தீர்த்தமாடி பரிசுத்தமான ஸ்வபாவத்திலே யிருந்தவர்களாய், பிரதிதினமும் ப்ராதக்காலத்தில் விளங்குகிறுர்கள். லக்ஷ்மீ ந்ருஸிம்மனை த்யானம் பண்ணிக்கொண்டு, அநகாளாய் (குற்றமற்றவர்களாய்) வேத சாஸ்திரங்களாலேயும், சுபமான பகவன் நாம ஸங்கீர்தனங்களாலேயும், ஸ்ரீய: பதியினுடைய கல்யாண குணங்களை காலக்ஷேபம் பண்ணிக்கொண்டிருக்கிறுர்கள். அந்த பத்மகிரியினுடைய பார்சிவத்தில், ஸம்பத்தை யுடைத்தானதாய், அவருடையகடாக்ஷத்தினுல் விருத்தியடைந்ததாய், ஸத்துக்களாலே சூழப்பட்டதாய், எம்பெருமானுர் முதலான ஆசார்யர்களாலே உகந்தருளப்

केदारैरपि नित्यसर्वफलदैः नित्योदवाहैर्वृता,
विख्याता खलु देव मातृकनदी ग्रामेषु सीमन्तवत् ।
यस्यां वेदविदो महीसुरवरा वेदान्त युग्मेरताः
कैंकर्या निरता वसन्ति सततं लक्ष्मी नृसिंहस्य ते ॥२५॥

**इति श्री ब्रह्माण्डपुराणे अर्चावतारस्थलवैभवकथने विष्णुचित्त मरीचिसंवादे पद्मगिरिमाहात्म्ये पञ्चमोऽध्यायः**

பட்டதாய் ஸர்வகாலங்களிலும் பலவத்தான வ்ருக்ஷங்களாலே புஷ்பபரிதங்களான புதருகளாலேயும், ப்ரகாசிக்கின்ற ஸ்ரீபுரி என்கிற மஹத்தான பட்டிணமானது விளங்குகிறது. ஸர்வகாலமும், பயிரோடு கூடின கேதாரங்களாலேயும், ஸர்வ காலமும் ஜல ப்ரவாஹங்களாலேயும் சூழப்பட்டதாய், தேவமாத்ருக ப்ரதேசங்களில், ஸீமாந்தம் போல் யாதொரு பட்டணம் ப்ரகாசிக்கிறதோ, அந்த ஸ்ரீபுரத்தில் வேதவித்துக்களாய், உபய வேதாந்த பாரங்கதாளாய், ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மனுடைய கைங்கர்யத்தில் நிரதாளான ஸ்ரீவைஷ்ணவர்கள் வாஸம் பண்ணுகிறார்கள்.

*பிரம்மாண்ட புராணத்தில் அர்ச்சாவதாரப் பெருமையைக் கூறுவதான விஷ்ணு சித்தர் மரீசி இவர்களுடைய ஸம்வாதத்தில் பத்மகிரி மாகாத்ம்யத்தில் ஐந்தாவது அத்யாயம் முற்றிற்று.*

## षष्ठोध्यायः प्रारम्भः

**विष्णुचित्तः —**

त्रिवेणी संगामस्यास्य तीरे दक्षिणतो गिरिः ।
सुदर्शन इति ख्यातः तत्रवेंकटनायकः ॥ १ ॥

सन्निधत्त इति प्रोक्तं त्वया खलु मया श्रुतं ।
तद्वैभवं विस्तरतः श्रोतुं कौतूहलं हि मे ॥ २ ॥

**मरीचिः —**

शृणुष्वाद्य महाबाहो वेङ्कटेशस्य वैभवं ।
पुरा भृगुः कृतयुगे त्रिवेण्याः संगमे शुभे ॥ ३ ॥

क्षेत्रे सत्यव्रते पुण्ये गिरौ सौदर्शनाख्यके ।
स्थित्वा मुहूर्तं स्नात्वाऽत्र कृत्वा पूर्वाह्निक क्रियाः ॥ ४ ॥

आराधनार्थं लक्ष्मीशं श्रीवेंकटनिकेतनम् ।
ध्यायन् स्थितः क्षणाद्देवः प्रादुरासीज्जनार्दनः ॥ ५ ॥

விஷ்ணுசித்தர் கேழ்க்கிறார், வாரீர் மரீசியே, இந்த த்ரிவேணீ ஸங்கமத்தினுடைய, தக்ஷிணபாகத்தில், திருவேங்கிடமுடையான் ஸாந்நித்யம் செய்தருளுகிறாரென்று தேவரீராலே சொல்லப்பட்டது. அந்த வைபவத்தை விஸ்தாரமாய்க் கேழ்க்க வேணுமென்று இச்சிக்கிறேன், என்று கேழ்க்க மரீசி சொல்கிறார், வாரீர் விஷ்ணுசித்தரே, ஸுதர்சன கிரியில் திருவேங்கிட முடையான் வைபவத்தைக்கேளும் பூர்வகாலத்தில் க்ருதயுகத்தில் சுபமான த்ரிவேணீ ஸங்கமத்தில் ப்ருகுவானவர், புண்யமான ஸத்யவ்ரத க்ஷேத்திரத்தில் ஸுதர்சனகிரியில் ஒரு

शंखचक्रधरोदेवः पीतवासाः चतुर्भुजः ।
ततः संतुष्टचित्तः सन् पूजयामास तं विभुं ॥ ६ ॥

ततः तु भगवान् साक्षात् दृष्ट्वा तद्रामणीयकं ।
तत्र सान्निध्यमकरोद्वेंकटेशो रमापतिः ॥ ७ ॥

ततः कदाचित्तुण्डीरमण्डलेशो जनाधिपः ।
चक्रवर्तीति विख्यातः श्रीवेंकटगिरेरधः ॥ ८ ॥

स्थित्वा राज्यं समकरोत् स गौढं दक्षिणापथं ।
श्रीवेंकटेश पद्माब्ज मकरन्दनिषेवकः ॥ ९ ॥

प्रत्यहं तस्य पादाब्जे हेमांबुजसहस्रकं ।
समर्प्य किङ्करो भूत्वा पालयन् पृथिवीमिमां ॥ १० ॥

முஹூர்த்தமாத்திரம் நின்று ஸ்நானம் பண்ணி பௌர்வான்னிகக்ரியைகளை செய்து திருவாராதன நிமித்தமாய் ஸ்ரீய: பதியான திருவேங்கிட முடையானை த்யானம் பண்ணிக் கொண்டிருந்தார். அந்தத் திருவேங்கட முடையான் சங்கசக்ரதாராய், சதுர்ப்புஜராய், பீதாம்பர தாராய், ஆவிர்ப்பவித்தார். அந்த ப்ருகுவானவர் ஸந்துஷ்ட சித்தராய் அந்த விபுவான ஸ்வாமியை ஆராதித்தார்.

பிறகு ஒரு காலத்தில் தொண்ட மண்டலத்திற்கு ராஜாவாய், சக்ரவர்த்தியென ப்ரஸித்தனானவன், திருமலையடிவாரத்திலிருந்து கௌட தேசம முதலான தக்ஷிண தேசமெல்லாம் பாலனம் பண்ணினான். அவன் திருவேங்கிடமுடையானுடைய திருவடித்தாமரையில் ப்ரவணனாய் பிரதிதினம், அவர் திருவடிகளில் ஆயிரம் ஸுவர்ண

इहैव तस्य सारुप्यं प्रार्थयामास भूमिपः ।
प्रसन्नवेंकटाधीशः प्रोक्तवान् मधुरं वचः ॥ ११ ॥
त्रिवेणी संगमे रम्ये सुदर्शन महीधरे ।
मत्सान्निध्यमभवत् भृगोः पूजार्थमादरात् ॥ १२ ॥
तत्र त्वं मां समाराध्य मत्सारूप्यमवाप्स्यसि ।
तच्छ्रुत्वा भगवद्वाक्यं तुण्डीरजगतीपतिः ॥ १३ ॥
संपूज्य वेंकटाधीश प्राप्तवान् तत्सरूपतां ।
शंखचक्रे वहन् भूम्यां चक्रवर्तीति विश्रुतः ॥ १४ ॥
कैरविण्यां च तद्देवं चक्रवर्जे श्रियः पतिं ।
पार्थसारथिरूपेण संसेव्य सगणं विभुं ॥ १५ ॥

தாமரைக்கமலம் ஸமர்ப்பித்து கிங்கரனைப் பூபரிபாலனம் பண்ணினன். அந்தத் தொண்டைமான் சக்ரவர்த்தி யானவன், இஹலோகத்தில் தானே தத்ஸாரூப்யத்தை ப்ரார்த்தித்தான். திருவேங்கட முடையான் ஸ்வப்னத் தில் மதுரமாய் திருவாய் மலர்ந்தருளினர். ரம்யமான த்ரி வேணீ ஸங்கமத்தில் ஸுதர்சனகிரியில் ப்ருகு மஹா முனிக்கு ஆராதனர்த்தமாக என்னுடைய ஸாந்நித்ய முண்டாயிற்று, அங்கே போய் என்னைப் பிரார்த்தித்து என்னுடைய ஸாரூப்யத்தை யடையக்கடவாய் என்று அருளிச்செய்தார். அந்த பகவத் வாக்யத்தைக்கேட்டு சக்ரவர்த்தியானவன் அந்தத் திருவேங்கட முடையானை ஆராதித்து அவருடைய ஸாரூபயத்தை அடைந்தான். அவராலே ஸாதிக்கப்பட்ட சங்க சக்ரங்களை தரித்துக் கொண்டு பூமியில் சக்ரவர்த்தியென்று பிரஸித்தனாய்

धर्मेण पालयित्वा च पृथिवीं पृथुवैभवः ।
जगाम परमं धाम पुनरावृत्ति वर्जितम् ॥ १६ ॥
त्रिवेणी संगमे तस्मिन् वेंकटेशो रमापतिः ।
सेव्यते सर्वभूपालैः आचार्यैः यमिनां वरैः ॥ १७ ॥

**इति श्री ब्रह्माण्डपुराणे अर्चावतारस्थलवैभवकथने विष्णुचित्त मरीचिसंवादे पद्मगिरिमाहात्म्ये षष्ठोऽध्यायः ॥**

கைரவிணீ என்கிற திவ்யதேசத்தில் திருவேங்கிட முடையானைத் திருவாழியாழ்வானில்லாதவராய் த்விபுஜராய், பார்த்தஸாரதி வேஷத்தோடே எழுந்தருளி யிருக்கிறவராய் ஸபரிகரரான கிருஷ்ணனை ஸேவித்து தர்மத்தினால் பூமியை பரிபாலனம் பண்ணி மஹா வைபத்தைத் யுடைத்தானவராய் புனராவிருத்தி யில்லாத பரமபதத்தை யடைந்தான். அந்த த்ரிவேணீ ஸங்கமத்தில், ஸ்ரீய : பதியான திருவேங்கிட முடையான் ஸகலராஜாக்களாலும் ஆசார்யர்களாலும், ஜீயர்களாலும், ஸதா ஸேவிக்கப் படுகிறார்.

பிரமமாண்ட புராணத்தில் அர்ச்சாவதாரப் பெருமையைக்
கூறுவதான விஷ்ணு சித்தர் மரீசி இவர்களுடைய
ஸம்வாதத்தில் பத்மகிரி மாகாத்ம்யத்தில்
ஆருவது அத்யாயம் முற்றிற்று.

## सप्तमोऽध्यायः प्रारंभः

विष्णुचित्तः —

प्रोक्तानि भवता विष्णोः चरितानि महात्मना ।
श्रुतान्यतिमनोज्ञानि मया तद्भक्तिगौरवात् ॥ १ ॥

कलौ कथं तद्भविष्यन्ति लोके विष्णोश्च वैभवाः ।
तद्वदस्व महायोगिन् मरीचे मधुराः कथाः ॥ २ ॥

कलिः कलुषचित्तानां अतिकालुष्यवर्धकः ।
भविष्यति हि लोकेऽस्मिन् सर्वधर्म विलापकः ॥ ३ ॥

तादृक्कलियुगे प्राप्ते विष्णुः त्यक्षति मेदिनीम् ।
भविष्यन्ति जनाः सर्वे वेदमार्गविरोधिनः ॥ ४ ॥

वर्णानामाश्रमाणां च सांकर्यं च भविष्यति ।
असत्यं सत्यमित्येव साधयिष्यन्ति वै जनाः ॥ ५ ॥

விஷ்ணு சித்தரானவர் மரீசியைக் கேழ்க்கிறார்— மஹாத்மாவான தேவரீராலே சொல்லப்பட்ட விஷ்ணுவி னுடைய மனோக்ஞமான அந்த சரித்ரங்களானது திரு வேங்கட முடையானுடைய, திருவடிகளில் பக்தியால் என்னால் கேழ்க்கப்பட்டது. கலியுகத்தில் பகவானுடைய வைபவத்தைச் சொல்ல வேணும். ஓய் மரீசி மஹாயோகி யே, கலுஷ சித்தர்களுக்கு மிகவும் கலக்கத்தை யுண்டு பண்ணுகிற கலியானது, இந்த லோகத்தில் ஸகல தர்மங்களுக்கும், லோபத்தைப் பண்ணிக்கொண்டு உண் டாகப் போகிறது. அப்படிப்பட்ட கலியுகமானது ப்ரா ப்தமாக விஷ்ணுவானவர் பூமியைவிட்டு எழுந்தருளப்

न यक्ष्यन्ति न दास्यन्ति नार्चयिष्यन्ति केशवं ।
पूजयिष्यन्ति रुद्रादीन् देवान् क्षुद्रफलप्रदान् ॥ ६ ॥

राजानो धनलोभाच्च लोकोपद्रवकारिणः ।
बलिनो दुर्बलान्नित्यं पीडयिष्यन्ति सर्वदा ॥ ७ ॥

एवं भूते कलियुगे भगवान् पद्मलोचनः ।
स्वीय कैंकर्यसाम्राज्य दीक्षितान् वीक्ष्यवक्ष्यति ॥ ८ ॥

तुण्डीरमण्डले पाण्ड्ये केरले चोलमण्डले ।
संभूय मम माहात्म्यं प्रकटीकर्तुमर्हथ ॥ ९ ॥

इत्याज्ञप्ता भगवता शेषशेषाशनादयः ।
लोकसंरक्षणार्थाय जनिष्यन्ति महीतले ॥ १० ॥

போகிறார். ஸகல ஜனங்களும் வேதமார்க்க விரோதிகளாகப் போகிறார்கள். ப்ராம்மணாதி வர்ணங்களுக்கும், பிரமசர்யாத்யாச்ரமங்களுக்கும் ஸாங்கர்யம் உண்டாகப் போகிறது. ஜனங்கள் அஸத்யத்தை ஸத்யமென்று ஸாதிக்கப் போகிறார்கள். யக்ஞங்களும் பண்ணப் போகிறதில்லை. ஸ்ரீகேசவனையும் ஆராதிக்கப் போகிறதில்லை. க்ஷுத்ரபல ப்ரதங்களான ருத்ராதி தேவர்களையாராதிக்கப் போகிறார்கள். ராஜாக்கள் தனலோபத்தினால் லோகத்தையும், பாதிக்கப் போகிறார்கள். பலவான்கள் துர்பலாளை ஸர்வகாலமும் பீடிக்கப் போகிறார்கள். அப்படிப்பட்ட கலியுகத்திலே புண்டரீகாக்ஷனான பகவான் தம்முடைய கைங்கர்யத்திலே தீக்ஷிதாளான அனந்த கருடவிஷ்வக்ஸேனாளை கடாக்ஷித்து அருளிச் செய்யப் போகிறார். துண்டீர மண்டலத்திலேயும்,

ताम्रपर्णी नदीतीरे कावेर्याश्च तटे शुभे ।
पयस्विन्याः तटे रम्ये काञ्च्यां भूतपुरे तथा ॥ ११ ॥
मल्लापुर्यां मयूराख्ये महीसारपुरे तथा ।
कुरूकायां कोलपुर्यां निचुलापत्तने शुभे ॥ १२ ॥
दण्डकोटि पुरे चैव श्रीशार्ङ्ग नगरे तथा ।
शठकोपादि योगीन्द्रा निरस्ता ज्ञानराशयः ॥ १३ ॥
ज्ञानशक्तिबलैश्वर्य वीर्यतेजांस्यशेषतः ।
अनुभूयानुभूयैव परमानंदनिर्भराः ॥ १४ ॥

பாண்டிய தேசத்திலேயும், கேரள தேசத்திலேயும் சோள தேசத்திலேயும், நீங்கள் உத்பவித்து என்னுடைய மாஹாத்ம்யத்தை பிரகடனம் பண்ணக் கடவீர்கள். இப்படி பகவானாலே ஆக்ஞாபிக்கப் பட்டவர்களாய் சேஷ சேஷாநம்சாதிகளான நித்ய ஸூரிகள் லோக ஸம்ரக்ஷணார்த்தமாக அவதாரம் பண்ணப் போகிறார்கள். தாம்ர பர்ணீ தீரத்திலும், காவேரீ தீரத்திலும், க்ஷீரநதீ தீரத்திலும், காஞ்சீநகரத்திலும், ஸ்ரீபூதபுரியிலும், மல்லா புரியிலும், மஹா நகரத்தில் மஹீஸார புரியிலேயும், திரு மண்டலங் குடியிலேயும், ஸ்ரீவில்லிப் புத்தூரிலேயும், ஸ்ரீசார்ங்கநகரத்திலேயும், திருநகரியிலேயும், கொல்லிக் காத்திலேயும் நம்மாழ்வார் முதலான யோகிகளும், ஸ்ரீமா னான லக்ஷ்மண முனியும், பூதேவியினுடைய அம்சமான கோதையும், இந்த மாஹாத்ம்யங்களை இதர விஷய ஸ்பர் சமில்லாதவர்களாய் ஸகல திவ்ய ஸூரிகளும் ஸ்ரீய: பதி யினுடைய கிருபையினாலே அடையப்பட்ட சுத்த ஸத்வ குணத்துக்கு ஆச்ரயர்களாய் அந்த, ச்ரியப்பதியினுடைய

कुयुक्तिमदमत्तेभचालितान् वेद भूरुहान् ।
स्थापयिष्यन्ति सद्वाद जलसेकेन भूतले ॥ १५ ॥
अज्ञानतिमिरौघांध वसुधां सूर्यवर्चसा ।
विद्योतितां करिष्यन्ति सूरयः सूर्यवर्चसाः ॥ १६ ॥
निम्नगानुद्धरिष्यन्ति जनान् संसृतिसागरे ।
बौद्धादि कुमतिग्रस्तं तत्वं तत्वविदां वराः ॥ १७ ॥
वाग्वज्रेण च तान् जित्वा वर्तयिष्यन्ति तत् पुनः ।
ब्रह्मसत्यं जगन्मिथ्येत्येवं शंकरभाष्यतः ॥ १८ ॥
यथावत् खण्डयित्वा च जगतः सत्यतामपि ।
शरीरत्वं च शेषत्वं विधेयत्वं श्रियः पतेः ॥ १९ ॥

க்ஞான சக்தி முதலான குணங்களை யனுபவித்து அனுபவத்திலுண்டான ப்ரீதியினால் ப்ரபந்தங்களை செய்தருளப் போகிறார்கள். குயுக்தி மதங்களாகிற மதயானைகளால் அலைக்கப் பட்ட வேதவிருக்ஷத்தை பூமியில் ஸத்வாதமாகிற ஜல ஸேகத்தினால் ஸ்தாபிக்கப் போகிறார்கள். அக்ஞானமாகிற அந்தகாரத்தினால் இருண்ட பூமியை தங்களுடைய தேஜஸ்ஸினால் ஸூரியனைப் போல் தேஜஸை உடைய ஸூரிகளானவர்கள் ப்ரகாசத்தை யுடைத்தானதாகப் பண்ணப்போகிறார்கள். ஸம்ஸார மாகிற ஸமுத்திரத்தில் மக்னரான ஜனங்களை தாங்கள் தாழ யிறங்கி உயர எடுக்கப்போகிறார்கள். பிரம்மம் ஸத்யம், ஜகன்மித்யை என்கிற சங்கர பாஷ்யத்தை யதாவத்தாகக் கண்டித்து பிரபஞ்சத்துக்கு ஸத்யத்வத்தையும், ஸ்ரீய: பதியான ஈச்வரனுக்கு சரீரமாகுகையும், சேஷனாயும் விதேயமாயிருக்குகையும்,

सगुणानां निर्गुणानां श्रुतीनां एककण्ठताम् ।
साधयिष्यन्ति सर्वज्ञाः तत्वत्रयविदोऽमलाः ॥ २० ॥

श्रुतयः स्मृतयश्चैव यथावत् स्वार्थबोधकाः ।
विशदीकृतसद्भावा भविष्यन्ति कलावपि ॥ २१ ॥

देवैः संप्रार्थितो विष्णुः दैत्यदानवराक्षसान् ।
विजित्यसर्वलोकानां रक्षणं कृतवान् किल ॥ २२ ॥

ते सर्वे दुष्टभूपालाः कलौ भूत्वा जगत् क्षयं ।
करिष्यन्ति महीं कृत्स्नां वशीकृत्य दुरात्मनः ॥ २३ ॥

हनिष्यन्ति च भूदेवान् देवतातिथिपूजकान् ।
वेदाध्ययनसंपन्नान् वेदान्तव्याक्रियापरान् ॥ २४ ॥

स्थानात्प्रच्यावयिष्यन्ति देवानर्चास्वरूपिणः ।
भिद्यन्ति च गृहिष्यन्ति भूषणादीनि सर्वशः ॥ २५ ॥

ஸகுண ச்ருதிகளுக்கும் நிர்குண ச்ருதிகளுக்கும் ஏககண்டதையையும், ஸர்வக்ஞாளாய், சித், அசித், ஈச்வரன் ஆகிற மூன்று தத்வங்களையும் அறிந்தவர்களாய், அவர்கள் இந்த க்ரந்தங்களை ஸ்தாபிக்கப் போகிறார்கள். ஸ்ருதிகளும் ஸ்மிருதிகளும் யதாப்ரகாரம் தன்னுடைய அர்த்தங்களை போதிக்கரதுகளாய் வெளியிடப்பட்டிருக்கிற ஸத்தான பாவங்களை யுடைத்தானதுகளாய், கலியுகத்திலேயும் ஆகப்போகிறதுகள். விஷ்ணுவானவர் தேவதைகளால் பிரார்த்திக்கப்பட்டு தைத்ய தானவ ராக்ஷஸர்களையெல்லாம் ஜயித்து, ஸகல லோக ரக்ஷணத்தையும் பண்ணினார். அந்த தைத்ய தானவ ராக்ஷஸர்களெல்லாரும்

जनाः सर्वे जनपदाः देवताश्चालयानि च ।
नाममात्रावशेषाः ते भविष्यन्ति कलौ युगे ॥ २६ ॥
यस्य मूर्ध्ना धृतं सर्वं जगदेतच्चराचरं ।
यस्योच्छ्वासानिलेनैव संहृतं च भविष्यति ॥ २७ ॥
य आसीदासन श्रीमत्तद्विष्णोः परमे पदे ।
क्षीराब्धौ रमया सार्धं यस्मिन् शेते जगत्पतिः ॥ २८ ॥
यमाहुरातपत्रं च पादुकामपि पीठिकाम् ।
दिव्य पीतांबरं चापि सर्वे शेष इतीरितः ॥ २९ ॥

---

இந்த கலியுகத்தில் துஷ்டராஜாக்களாய், பூமியை ஸ்வாதீனம் பண்ணிக் கொண்டு ராஜாக்களை ஜயித்து லோகோபத்ரவம் பண்ணப் போகிறார்கள். பிராம்மணர்களையும் பிடிக்கப் போகிறார்கள். இருந்த இடத்திலிருந்து கொண்டு வேதாத்யயனம் பண்ணிக் கொண்டு வேதவேதாந்த விசாரம் பண்ணுகிற ஸாதுக்களை எல்லாம் ஸ்தானப்ரஷ்டர்களாகப் பண்ணி, அர்ச்சாவதார ஸ்தலங்களையெல்லாம், பின்னம் பண்ணி பூஷணாதிகளையெல்லாம அபஹரிக்கப் போகிறார்கள். ஸகல ஜனங்களும், தேவதைகளும், தேவாலயங்களும் இருந்த இடம் தெரியாமல் நாமமாத்ர சேஷமாய் போகப்போகிறது.

யாதொருவருடைய சிரஸ்ஸினால், சராசராத்மகமான இந்த ஜகத்தானது தரிக்கப்பட்டதோ, எவருடைய உச்வாஸ விஷாக்னியாலே ஸம்ஹரிக்கப்படப்போகிறதோ, யாதொருத்தர் ஸ்ரீவைகுண்டத்தில் பரமபதநாதனுக்கு ஸிம்மாஸனமோ, யாதொருத்தர் மேல் க்ஷீராப்தியில் ஜகத்பிரபுவானவர் பெரிய பிராட்டியோடு கண்வளர்க்

अनन्त इति विख्यातः सहस्र फणसंयुतः ।
ततो लक्ष्मण इत्येव त्रेतायां राघवानुजः ॥ ३० ॥
द्वापरेत्वग्रजोऽभूत्स कृष्णस्य बलिनां वरः ।
कलौ च कलिदोषस्य निहता संभविष्यति ॥ ३१ ॥
स तु काञ्च्यां करीशस्य सन्निधौ निवसिष्यति ।
तस्माल्लब्ध समस्तार्थनिर्णयः प्रभविष्यति ॥ ३२ ॥
सर्वोपनिषदां अर्थं विशदीकृत्य भूतले ।
मार्ताण्डवत् प्रभाभिर्यः तमांस्यपहरिष्यति ॥ ३३ ॥
व्यासाख्ययोगिविशदीकृतसूत्रभाष्यं,
गीतार्थभाष्यमपि सारमुदारसूक्त्या ।
वेदान्तदीपमपि गद्यमवद्यहीनं,
सम्यक्करिष्यति महान् यतिसार्वभौमः ॥ ३४ ॥

தருளுகிருரோ, யாரொருத்தரை சத்திரமாகவும் பாதுகையாகவும், பீடமாகவும், திவ்யபீதாம்பரமாகவும், சொல்லுவர்களோ அவர் சேஷனென்று சொல்லப்பட்டவராய் ஆயிரம் பணமணிகளோடு கூடின, அனந்தனென்று ப்ரஸித்தியுடையவருய், த்ரேதாயுகத்தில், ராகவானுஜராய் லக்ஷ்மணராஞர். அவர்தானே த்வாபரயுகத்தில் க்ருஷ்ணருக்கு அக்ரஜரான பலபத்ர ராமஞஞர். அவர்தானே கலியுகத்தில், கலிதோஷ நிஹந்தாவாய், அவதரிக்கப் போகிருர்.

அவர் காஞ்சீ நகரத்திலே கரிகிரிநாதன் ஸந்நிதியில் வாஸம் பண்ணப் போகிருர். அவரிடத்தில் நின்றும், ஸகல தத்வார்த்த நிர்ணயத்தை யடையப் போகிருர்.

श्रीशं च हेयगुणवर्जितमार्यभोग्य,
कल्याणनिर्मल गुणाढ्यममोघशक्तिः ।
वैकुण्ठलोक विहितासनमन्तरात्म,
भूतं समस्त जगतां करुणा पयोधिम् ॥ ३५ ॥
भाष्यादिषु प्रकटयिष्यति वेदवाक्यैः,
मुख्यैः पुराणवचनैः यमिनां वरेण्यः ।
अन्यान् कुदृष्टि विहितान् श्रुतिमार्गरोधान्,
ग्रन्थान् सुगन्धरहितान् विरसांश्च कृत्वा ॥ ३६ ॥

---

ஸகல உபநிஷ தர்த்தங்களையும, பூமியில் விசதமாகப் பண்ணப் போகிறார். ஸூர்யனைப்போலே பிரகாசிக்கப் போகிறார். வ்யாஸரென்கிற திருநாமத்தை யுடைத்தான ரிஷியினாலே விசதீகரிக்கப்பட்ட ஸூத்ரத்திற்கு பாஷ்யத்தையும், கீதா பாஷ்யத்தையும், கம்பீரமான ஸூக்தியினால் வேதாந்த ஸாரத்தையும், வேதாந்த தீபத்தையும், அவத்யரஹிதமான கத்யத்ரயத்தையும் நன்றாக அருளிச் செய்யப் போகிறார். யதிச்ரேஷ்டரான எம்பெருமானார் ஸ்ரீய: பதியை ஹேய குணவர்ஜிதராயும், நித்யஸூரி பரிஷத் போக்யமாயும், நிர்மலமான கல்யாணகுண பூர்ணராயும், ஸர்வசக்தராயும், வைகுண்ட நிலயராயும், ஸகல ஜகத்துக்கும் அந்தர்யாமியாயும், க்ருபா ஸமுத்ரமாயும் பாஷ்யாதி க்ரந்தங்களிலேயும், வேத வாக்யங்களாலும், முக்யமான புராண வசனங்களாலும், வேத விருத்தங்களாலும், குயுக்திகளாலே பண்ணபபட்ட அன்யக்ரந்தங்களை ஸுகந்த ரஹிதங்களாயும், ரஸ வர்ஜிதங்களாயும், பண்ணி ப்ரகடனம் செய்தருளப் போகிறார். கரிகிரிநாதனுக்கு சிஷ்யனாய், ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீய: பதியாய் எழுந்

शिष्यो भूत्वा करिगिरिपतेः पोष्यतां प्राप्यरंगे,
लक्ष्मीभर्तुः वृषगिरिपतेः शंखचक्रे प्रदाय ।
भूत्वा तातो यदुगिरिपतेः लोकरक्षां वितन्वन्,
लोकान् सर्वान् पदसरसिजे नाक्रमिष्यत्यसंगान् ॥ ३७ ॥
श्रीरंगादि स्थलानां सकलनियमनं साधयिष्यत्यजस्रं,
श्रीशः श्रीवैष्णवानां निरुपमविभवं शेषिशेषत्व बंधम् ।
सोपानं मुक्तिमार्गे प्रथमगुरुपदप्रापक भक्तिमार्गम्,
यावज्जीवं च कृत्ये नियममपि विभोः किंकराणां जनानाम् ॥
एवं तदीयपदपङ्कज संश्रितानां,
संख्याविहीन महिमैक निकेतनानाम् ।
गोविन्दभट्टनिगमान्त गुरूत्तमानां,
पादारविन्दमकरन्द मधुस्पृशोऽन्ये ॥ ३९ ॥

---

தருளியிருக்கும ரங்கநாதனுக்கு போஷகத்வத்தை யடைந்து, விருஷகிரி நாதனுக்கு சங்கசக்ரங்களை ஸமர்ப்பித்து, யாதவாத்ரீச்வரனுக்கு பிதாவாய், லோகரக்ஷணத்தைப் பண்ணி, ஸமஸ்த ஜனங்களையும், இதரஸம்பந்தமில்லாதவர்களாய், திருவடிகளால் ஆக்ரமிக்கப் போகிறார். ஸ்ரீரங்காதி திவ்ய தேசங்களில் ஸகல நிர்வாஹத்தையும், ஸ்ரீய : பதிக்கும், விஷ்ணு பக்தர்களுக்கும், நிருபமைச்வர்யமாகிற சேஷ சேஷித்வ ஸம்பந்தத்தையும், மோக்ஷமார்கத்தில் அர்ச்சிராதி ரூபமார்க்கமான, ஸோபானத்தையும் பிரதமாசார்யரான பகவானுடைய, திருவடியை யடைவிப்பிக்கிற பக்தி மார்கத்தையும், பகவத் தாஸர்களுக்கு யாவதாயுஸ்ஸும், கர்மங்களிலே நியமத்தையும் ஸாதிக்கப் போகிறார். பகவானுக்கு ஸ்ரீபாஞ்ச

भविष्यतिवसुन्धरा भगवतः प्रसादोन्मुखैः
निरन्तरदिगन्तरानिगम युग्मपारंगतैः ।
स्ववाग्विभवनिर्जित प्रबल दुर्मतैर्देशिकैः
त्रयीशिखरदेशिक प्रभृति देशिकैरुत्तमैः ॥ ४० ॥

**इति श्री ब्रह्माण्डपुराणे अर्चावतारस्थलवैभवकथने विष्णुचित्त मरीचिसंवादे पद्मगिरिमाहात्म्ये सप्तमोऽध्यायः ॥**

ராத்திரத்திலுல் நித்யா ராதனமும, ஜீர்ணமான ஸ்தலங்களுடைய வ்ருத்தியையும், பக்தர்களால் பண்ணி வைக்கப் போகிருர். விசேஷித்து யாதவாத்ரியில், தம்முடைய ப்ரபாவத்தை ப்ரஸித்தமாக செய்தருளப் போகிருர். இப்படி தம்முடைய திருவடிகளை ஆச்ரயித்தவர்களாய் அஸங்க்யேயமான மாஹாத்ம்யத்திற்கு முக்யஸ்தானமான எம்பார், பட்டர், வேதாந்த தேசிகர் என்கிற ஆசார்ய ஸ்ரேஷ்டாளுடைய திருவடிகளுக்கு மற்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லோரும் மதுவ்ரதங்கள். பூமியானது பகவத் கிருபைக்கு அபிமுக மாகப்போகிறது. உபய வேதாந்த பாரங்கதாளால் நிரந்தரமான திகந்தரத்தை யுடைத்தானதாகப் போகிறது. தங்களுடைய வாக்விபவத்தால் ஜயிக்கப்பட்ட ப்ரபலாளான துர்மதத்தை யுடைத்தானவர்களாய் உத்தமாளா யிருக்கிற வேதாந்த தேசிகன் முதலான ஆசார்யாளால் பூமியானது நிபிடமாகப் போகிறது.

*ப்ரம்மாண்ட புராணத்தில் அர்ச்சாவதாரப் பெருமையைக் கூறுவதான விஷ்ணு சித்தர் மரீசி இவர்களுடைய ஸம்வாதத்தில் பத்மகிரி மாகாத்ம்யத்தில் ஏழாவது அத்யாயம் முற்றிற்று.*

## अष्टमोऽध्यायः प्रारम्भः

**विष्णुचित्तः —**

अवतीर्यकलेरादौ शेषः श्रेष्ठः *फणाभृतां ।
रामानुज इति ख्यातो भाष्यकृच्च भविष्यति ॥ १ ॥
इति प्रोक्तं हि भवता महत्तद्वैभवं श्रुतम् ।
जगत्पद्मं विकसितं रामानुजसुभानुना ॥ २ ॥
तस्मिन्नस्तमितेभानौ कथमेतद्भविष्यति ।

**मरीचिः —**

वेङ्कटाद्रीश्वरं लक्ष्मीः तद्वक्षस्थलसंस्थिता ।
लीलया तं वशीकृत्य वदिष्यति जगद्धितम् ॥ ३ ॥
मोहनार्थं त्रिजगतां बिभ्रद्रूपं विलक्षणम् ॥ ४ ॥

விஷ்ணு சித்தர் கேழ்க்கிறார். பணிச்ரேஷ்டரான (பாம்பு) சேஷன் கலியுகத்தில் ஆதியில் அவதரித்து ராமானுஜனென்று திருநாமத்தை யுடைத்தானவராய் பாஷ்யம் செய்தருளப் போகிறார். இப்படி தேவரீரால் சொல்லப்பட்ட அந்த மஹத்தான அந்த வைபவம் கேழ்க் கப்பட்டது. ராமானுஜனென்கிற நல்ல ஸூர்யனாலே ஜகத்தாகிற பத்மம் விகஸிதமாயிற்று. அந்த ஸூர்யன் அஸ்தமித்த பிறகு எப்படி ஆகப்போகிறது. மரீசியான வர் சொல்லுகிறார். திருவேங்கிடமுடையானுடைய திரு மார்பிலே நித்யவாஸம் செய்தருளுகிற லக்ஷ்மியானவள் அந்த வெங்கிடாசலபதியைத் தம்முடைய விலாஸத்தி

---

* फणिभृतां वरः (इति मातृकायां अस्ति)

लंबमान जटाभारो सच्छत्रसकिरीटवान् ।
असाधारणचिह्नाभ्यां वर्जितः पुरुषोत्तमः ॥ ५ ॥

आराधितः कृत्तिकानां सुतेन शरदां शतं ।
भविष्यति ततः पश्चात् कलहश्च भविष्यति ॥ ६

त्वदीयानां च भक्तानां तद्भक्तानां जनार्दन ।
त्वदाज्ञयाह्यनंतोऽयं अवतारं करिष्यति ॥ ७ ॥

रामानुज इति ख्यातः गुरूणां च गुरुः कलौ ।
शंखचक्रे प्रदायैव लोके ख्यातिं गमिष्यति ॥ ८

னால் வசீகரித்து லோகஹிதமான வார்த்தையை அருளிச் செய்யப்போகிறார். என்னவென்றால் ஓய் ஸ்வாமி, தேவரீர் மூன்று லோகத்தினுடைய மோஹனார்த்தமாக விலக்ஷணமான ரூபத்தை வஹிக்கிறவராய்,

தாழ் சடையும் நீள் முடியும் மின்கிறபடியே தொங்கா நிற்கிற ஜடாபாரத்தை யுடைத்தானவராய், விளங்கா நிற்கிற ரத்னமயமான திருவபிஷேகத்தை யுடைத்தானவராய், அஸாதாரண சிங்நமான சங்க சக்ரங்களாலே விடப்பட்டவராய், புருஷோத்தமரான தேவரீர் கார்த்திகேயனால் ஆயிரம் வருஷம் ஆராதிக்கப்படப்போகிறீர், பிறகு, தேவரீர் பக்தாளுக்கும், ஸுப்ரமணிய பக்தாளுக்கும் கலகமுண்டாகப்போகிறது. கலியுகத்தில் ராமானுஜனென்று திருநாமத்தை யுடைத்தானவராய், ஆசார்யாளுக்கெல்லாம் ஆசார்யராய், தேவரீருக்கும் சங்க சக்ரங்களை ஸமர்ப்பித்து அவர், யசஸ்ஸை அடையப்போகிறார். கலியுகத்தில் அப்பனுக்கு சங்காழியளித் தருளும் பெருமானென்றும், ஜகத்திற்கு ஸ்வாமி யென்றும், பூஜ்யராய்

स्वामिनः शंख चक्रे द्वे कृपया संप्रदायकः ।
स्वामीति जगतां पूज्यो भविष्यति कलौ युगे ॥ ९ ॥

तस्मिन्नस्तमिते भानावन्तः तिमिरनाशके ।
भाष्यादि ग्रन्थवक्तारं त्वन्माहात्म्य विवर्धकम् ॥ १० ।

कं नियोजसि स्वामिन् इति लक्ष्म्या निबोधितः ।
श्री वेंकटाचलाधीशः घण्टां लोकाभयंकरीम् ॥ ११ ॥

संवीक्ष्य घंटे लोकेत्वमवतारं करोत्विति ।
आज्ञाप्य तत्स्वरूपेण स्वयमाविर्भविष्यति ॥ १२ ॥

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
घण्टावतार इति च लोके विख्यातपौरुषः ॥ १३ ॥

ஆகப்போகிருர். அந்த அந்தஸ்திமித நாசகரான ராமானுஜ திவாகரன் அஸ்தமித்த பின்பு பாஷ்யாதி க்ரந்தப்ரவர்த்தகரான தேவரீருடைய ப்ரபாவத்தைவெளியிடப்போகிற வரை யாரை நியமிக்கப்போகிறது, ஸ்வாமியென்று லக்ஷ்மியிஞல் கேட்கப்பட்டவருய் திருவேங்கடமுடையான் லோகங்களுக் கெல்லாம் அபயத்தைக் கொடுக்கிற கண்டையைப் பார்த்து, வாராய் கண்டையே, நீ லோகத்தில் அவதாரத்தைப் பண்ணக்கடவாய், என்று ஆக்ஞாபித்து அந்த கண்டா ஸ்வரூபமாய், ஸ்வயமவதரிக்கப் போகிருர். பக்தி ஸாம்ராஜ்யத்தையுடைத்தானவர் வேங்கட நாதார்யர், கவிதார்கிககேஸரீ, கண்டாவதாரர், என்று லோகத்தில் பிரஸித்தமான பௌருஷத்தை யுடைத்தானவருய், ஹயக்ரீவரை உபாஸித்து, அந்த ஹயக்ரீவரிடத்தில் நின்றும் ஸரஸ்வதியை

उपास्यहयवक्त्रं च तस्माल्लब्ध्वा सरस्वतीं ।
सर्वतन्त्रः स्वतन्त्रश्च सर्वतन्त्रप्रवर्तकः ॥ १४ ॥
बौद्धादि दुर्मतांधानां खण्डनैकप्रचण्डधीः ।
स्वसिद्धान्तप्रवचने निपुणो विदुषां वरः ॥ १५ ॥
वेदान्तोभयनिष्णातः श्रीभाष्यस्य प्रवर्तकः ।
वेदान्ताचार्य इति हि लोके ख्यातिं गमिष्यति ॥ १६ ॥
भविष्यन्ति महीभागे तत्सिद्धांत प्रवर्तकाः ।
अर्थपञ्चक तत्वाज्ञाः पञ्चकाल परायणाः ॥ १७ ॥
तद्भक्तभक्तभक्तानां भक्तः कश्चिन्महामतिः ।
लक्ष्मी नृसिंहपादाब्ज मकरन्दमधुव्रतः ॥ १८ ॥

அடைந்து ஸர்வதந்திர ஸ்வதந்திரராயும், ஸகல சாஸ்த்ர ப்ரவர்த்தகராயும், பௌத்தாதிகளான துர்மதாளுடைய, கண்டனத்திலே அத்யந்தம் ப்ரசண்டமான புத்தியை யுடையவராய் ஸ்வஸித்தாந்த ப்ரவசனங்களிலே ஸமர்த்தராய், வித்வான்களுக் கெல்லாம் ச்ரேஷ்டராய், வேதாந்தங்களிலும் ஸாமர்த்யத்தை யுடைத்தானவருய், ஸகல பேருக்கும, ஸ்ரீபாஷ்யத்தை ஸாதித் தருளினவராய், வேதாந்தா சார்யரென்று லோகத்தில் பிரஸித்தியை யடையப் போகிருர். பூமியில் வேதாந்தா சார்யருடைய ஸித்தாந்த ப்ரவர்த்தகாளாய், ஸ்வஸ்வரூப, பரஸ்வரூப, உபாய ஸ்வரூப, விரோதி ஸ்வரூப, புருஷார்த்த ஸ்வரூபங் கங்களை அறிந்தவர்களாய் பஞ்சகால பராயணாளாய் உண்டாகப் போகிருர்கள். அந்த வேதாந்த தேசிகருடைய, சிஷ்ய ப்ரசிஷ்யாளுடைய சிஷ்யரான ஒருவர்

अत्रिवंशसमुद्भूतः श्रीमान् वैष्णव संततौ ।
भविष्यति महीभागे महाभागवतोत्तमः ॥ १९ ॥
जन्मान्तरकृतेनैव महता तपसा पुनः ।
लक्ष्मी नरहरेः सर्वं कैंकर्यं च करिष्यति ॥ २० ॥

**इति श्री ब्रह्माण्डपुराणे अर्चावतारस्थलवैभवकथने विष्णुचित्त मरीचिसंवादे पद्मगिरिमाहात्म्ये अष्टमोऽध्यायः**

லக்ஷ்மீ ந்ருஸிம்மனுடைய திருவடிகளிலே, ப்ரவஹியா ப்ரவஹிக்கிற தேனுக்கு வண்டாய், அத்ரி வம்சத்திலே பிறந்தவராய், ஸ்ரீமானாய், வைஷ்ணவ ஸந்ததியிலே மஹா பாகவத ச்ரேஷ்டராய், பூமியில் உண்டாகப் போகிறார். ஜன்மாந்தரத்தில் பண்ணப்பட்ட மஹா தபஸ்ஸினால், திரும்பி லக்ஷ்மீ ந்ருஸிம்மனுடைய, ஸகல கைங்கர்யங் களையும் பண்ணப் போகிறார்.

பிரம்மாண்ட புராணத்தில் அர்ச்சாவதாரப் பெருமையைக்
கூறுவதான விஷ்ணு சித்தர் மரீசி இவர்களுடைய
ஸம்வாதத்தில் பத்மகிரி மாகாத்ம்யத்தில்
எட்டாவது அத்யாயம் முற்றிற்று.

## नवमोऽध्यायः प्रारंभः

**विष्णुचित्तः —**

श्रीमत् पद्मगिरीशस्य माहात्म्यं श्रुतमद्भुतम् ।
तस्य कैंकर्यनिरतः कलौ कश्चिद्भविष्यति ॥ १ ॥

इति प्रोक्तं हि भवता तद्वदस्व ममानघ ।
कलौ युगे नरान्नित्यं येन केन च हेतुना ॥ २ ॥

कृत्वा द्रव्यार्जनं सम्यक् स्वीयपोषण तत्पराः ।
शब्दादि विषये रक्ता भविष्यन्तीति हि श्रुताः ॥ ३ ॥
लक्ष्मीनृसिह्मपादाब्जे भक्तिमान् को भविष्यति ।

**मरीचि :—**

प्राप्ते कलियुगे क्रूरे बहुदोषप्रवर्धके ।
चतुः सहस्रवर्षाणां उर्ध्वमष्टशतात्परं ॥ ४ ॥

---

*விஷ்ணுசித்தர் கேட்கிறார். ஸ்ரீமானான பத்மகிரிநாதனுடைய, அத்புதமான மாகாத்ம்யம் கேழ்கப்பட்டது. கலியுகத்தில் அவருடைய கைங்கர்யத்தில் நிரதரான ஒரு மகாபுருஷர் உண்டாகப் போகிறாரென்று உம்மால் சொல்லப்பட்டது. வாரீர் பாபமில்லாதவரே, அதை எனக்கு நன்றாக அருளிச்செய்ய வேணும், கலியுகத்தில் மனுஷ்யாள் நித்யம் எப்படிப்பட்ட கிருத்யங்களாலேயாகிலும், நன்றாக த்ரவ்ய ஸம்பாதனம் பண்ணி ஸ்வீய ஜனபோஷணத்திலே ஆஸக்தாளாய் சப்தாதி விஷயங்களில் ஆசையை உடைத்தானவாளாய் ஆகப்போகிறாளென்று கேழ்கப்பட்டதன்றோ? இந்த லக்ஷ்மீந்ருஸிம்ம*

कर्णाटकेषु भूपेषु विलयं प्राप्तवत्स्वथ ।
म्लेच्छैराक्रमिता भूमिः भविष्यति हि तादृशी ॥ ५ ॥
कश्चित्तदादि दुष्टात्मा पाश्चात्योऽकरुणःपरं ॥ ६ ॥
कर्णाटक महीं कृत्स्नां आक्रम्य वरपौरुषः ।
खरवच्च जनस्थानं निर्जनां च करिष्यति ॥ ७ ॥
प्राक् पयोनिधि पर्यन्तं पाश्चात्याच्च गिरेरधः ।
दिव्यदेशांश्च विख्यातान् अग्रहारान् बहूनपि ॥ ८ ॥
ब्राह्मणादीन् जनान् सर्वान् पीडयिष्यति दुर्भटैः ।
हयैश्च शतसाहस्रैः गजैश्च गिरिसन्निभैः ॥ ९ ॥
गिरिर्दुर्गवनस्थैश्च किरातैर्बहुभिर्वृतः ।
एवमाधर्षितां भूमिं दुष्टेनेष्टविरोधिना ॥ १० ॥

---

னுடைய திருவடிகளில் பக்தியுடைய புருஷன் யாருண்டாகப் போகிறுர்? வெகு தோஷங்களை வ்ருத்தி பண்ணு நிற்கிற க்ரூரமான கலியுகமானது ப்ராப்தமானபடியால் நாலாயிரத்து எண்ணூறு ஸம்வத்ஸரத்துக்கு மேல், கர்ணுடக ராஜாக்களெல்லாம் லயத்தை யடைந்த பின்பு மிலேச்சர்களால் பூமியானது ஆக்ரமிக்கப்படப் போகிறது. அந்த ஸமயத்தில் நிர்த்தயனுன ஒரு பாச்சாத்யன், உலகத்தை அக்கிரமத்தை உடையவனுய், ஸகலமான கர்ணுடக பூமியையும், ஆக்ரமித்து கரனுனவன் ஜனஸ்தானத்தை ஆக்ரமித்தாப் போலே பூமியை நிர்ஜனமாகப் பண்ணப் போகிறுன். மேற்கு பர்வதம் கிழக்கு ஸமுத்ரம் வரையில், நிர்ஜனமாகப் போகிறது. திவ்ய தேசங்களையும், பிரஸித்தமான அனேக அக்ரஹாரங்

दृष्ट्वा कष्टमिति ज्ञात्वा सर्वाभीष्टप्रदो हरिः ।
वरदो वारणाद्रीशः वेंकटाद्रिं गमिष्यति ॥ ११ ॥

अन्ये च किंग्रहाधीश प्रमुखा देवता गणाः ।
तत्र तत्र वनांतेषु स्थास्यन्ति बहुशः समाः ॥ १२ ।

जनाः सर्वे महा दुष्ट भूपाल हृदसंपदः ।
गमिष्यन्ति वनान्तेषु विभ्रष्ट प्रियबांधवाः ॥ १३ ॥

देशांतरं च गिरिदुर्ग वनांतराणि,
द्वीपांतरं च लवणार्णव तीरमन्ये ।
लोकांतरं च गहने गतचेतनाश्च,
त्यक्त्वा स्वबंधुजनमिष्टजनं प्रविष्टाः ॥ १४ ॥

களையும், பிராம்மணுள் முதலான ஸகல ஜனங்களையும் துஷ்டாளான ஸகல படாளாலேயும், அனேக ஆயிரக் கணக்கான குதிரைகளாலேயும, பர்வதங்கள், துர்கங்கள் காடுக்ளில் இருக்கிற அனேக கிராதகர்களாலேயும சூழப்பட்டவனுய் பாதிக்கப் போகிருன். இப்படி இஷ்ட ஜன விரோதியான துஷ்டனுலே உபத்ரவம் பண்ணப் பட்ட பூமியை கடாக்ஷித்து கஷ்டமென்று திருவள்ளம் பத்தி ஸர்வாபீஷ்ட ப்ரதனுன கரிகிரிநாதன் லக்ஷ்மீ ஸமேதனுய் வெங்கிடா சலத்தைக் குறித்து எழுந்தருளப் போகிருர்.

திருவள்ளுருக்கு நாயகனுன வீரராகவன் முதலான இதர எம்பெருமான் களெல்லோரும் அந்தந்த காடு களிலே வாஸம் பண்ணப்போகிருர்கள். ஸமஸ்த ஜனங் களும் துஷ்டராஜாக்களால் ஹரிக்கப்பட்ட ஸம்பத்தை

एवं भूते महारौद्रे काले कल्पांतसन्निभे ।
त्रिवेणी संगमे पद्म महीध्रे सर्वदेवताः ॥ १५ ॥
लक्ष्मीनृहरिमासाद्य स्तोतुकामा महीसुरैः ।
श्रुतिभिस्तोत्र वचनैः स्तोष्यन्तीह जनार्दनम् ॥ १६ ॥
सहस्रशिरसं देवं सहस्रपदपङ्कजं ।
सहस्रबाहुं पद्माक्षं सहस्रार्कसमप्रभम् ॥ १७ ॥
सहस्र शिरसा नित्यं सेवितं पूजितं प्रभुम् ।
जगत्सृष्टिस्थिति लयैः प्रकटीकृतवैभवं ॥ १८ ॥
लीलार्थं सर्वजगतां स्रष्टारं ब्रह्मरूपिणम् ।
स्वयमेव स्थितं स्थित्यां संहारे रुद्ररूपिणम् ॥ १९ ॥

யுடைத்தானவர்களாய், சிதறிப்போன பந்துக்களேயும், ஸ்த்ரீகளேயும் உடைத்தானவர்களாய், காடுகளில் போகப் போகிருர்கள். தேசாந்தரங்களேயும் பர்வத துர்கங்களே யும் காடுகளேயும் த்வீபாந்தரங்களேயும், ஸமுத்திர தீரத் தையும், சிலர் லோகாந்தரத்தையும, இஷ்டஜன பந்துக்க ளெல்லாரையும் விட்டு காட்டில் பிரவேசிக்கப் போகிருர் கள். இப்படிப்பட்ட பிரளய கால ஸமமான மஹா ரௌத்ரமான காலத்தில் த்ரிவேணீ ஸங்கமத்தில் பத்ம கிரியில், ஸகலதேவதைகளும், லக்ஷ்மீந்ருஸிம்ம ஹரியை அடைந்து, ஸ்தோத்ரம் பண்ணவேணு மென்று இச்சை யை யுடைத்தானவர்களாய், பிராம்மணுளோடு கூட ச்ருதி களாலேயும், ஸ்தோத்ர ரூபமான வாக்யங்களாலேயும் ஜஞர்தனனே ஸ்தோத்ரம் பண்ணப் போகிருர்கள். "ஸஹஸ்ர சீர்ஷா புருஷ:" என்கிறபடியே ஆயிரம் திரு முடிகளேயுடைத்தாய், ஸ்வாமியாய், ஆயிரம் திருவடி

सर्वदेव स्वरूपं च सर्वभूत स्वरूपिणम् ॥
सर्वान्तर्यामिरूपेण नियन्तारं नता वयम् ॥ २० ॥

**ब्रह्मा** —

आदौत्वन्नाभि पद्मे जगदुपकृतये मां हि सृष्ट्वा ततःत्वं,
जातो मौढ्यादजानन् किमपि कलुषितं स्वेतरं वीक्षितुं वा ।
हंसो भूत्वा त्वमेव प्रथमज इति मां वीक्ष्य कस्त्वं तदोमि-
त्युच्छार्यैवादरान्मामखिलमपि रहः प्रोक्तवानश्वरूपी ॥२१॥

களை யுடைத்தானவராய், ஆயிரம திருக்கைகளை யுடைத்தானவராய் தாமரைப்பூ போன்ற திருக்கண் மலரை யுடைத்தானவராய், ஸஹஸ்ரார்க்க ஸமமான தேஜஸ்ஸை யுடைத்தானவருய், ஆயிரம் படத்தை யுடைத்தான ஆதி சேஷனுலே ஸேவிதருய், அகில ஜகத்பிரபுவாய், ஜகத்தினுடைய ஸ்ருஸ்டி ஸ்திதி லயங்களாலே, பிரஸித்த வைபவத்தை யுடைத்தானவராய லீலார்த்தமாக ஸகல ஜகத்துக்களுடைய, ஸ்ருஷ்டியில் பிரமம ஸ்வரூபியாய், பரிபாலனத்தில் ஸ்வயமே விஷ்ணுவாய், ஸம்ஹாரத்தில் ஸ்வயமே ருத்ரரூபியாய், ஸகல தேவஸ்வரூபியாய், ஸகல பூதஸ்வரூபியாய, ஸகலாத்மாக்களிடத்திலும், அந்தர்யாமி ரூபத்தினுல் நியாமகமாய் எழுந்தருளி யிருக்கிற தேவரீரை தண்டம ஸமர்ப்பிக்கிறோம்.

பிரும்மா ஸ்தோத்ரம் பண்ணுகிருர்—

லோக ஸ்ருஷ்டிகாலத்தில் தேவரீருடைய நாபிகமலத்தில் லோகோபகாரார்த்தமாக என்னை ஸ்ருஷ்டித்து அனந்தரம் ஜாதகனுன நான் மௌட்யத்தினுல் ஒன்றுமறியாதவனுய் என்னைக் காட்டிலு மிதர வஸ்துக்களை

पश्चात्तद्वेदरूपे मम धन नयने दुष्ट दैत्यौ गृहीत्वा
यातौ पातालमन्तः जलनिधिमपि तौ मत्स्यरूपी प्रहत्य ।
नीत्वा वेदानदात्स्त्वं पुनरपि मम भो लोकसृष्ट्यादि मूलान्
स्वामिन् लक्ष्मीनृसिंह्माश्रितजननिवह प्राणहेतो नमस्ते ॥

रुद्रः —

यस्य त्वं लक्ष्मीनृसिंह्मस्थिरतरकमठः पृष्ट संविष्टभूमिः,
पाताले चादिशेषप्रबलगजधरैस्सर्वदेवैः स्तुतोऽसि ।
तादृच्छक्तिस्तवाद्य क्व च हि गतवती मां नियोज्याखिलोऽर्याः,
काले संहारकर्तेत्युभयमपि भवान् कर्तुकामोऽस्म्यकाले ॥

பார்ப்பதற்கு கலங்கினேனென்று தேவரீர் தானே ஹம்ஸாவதாரம் செய்தருளி ஜேஷ்டபுத்ரனை என்னை கடாக்ஷித்து. "கஸ்த்வம்," என்று நாமகரணத்தைப் பண்ணி பிரணவத்தை உபதேசித்து ப்ரீதியினாலே ஹயக்ரீவரூபியாய் அகில ரஹஸ்யத்தையும் ஸாதித் தருளினீர்.

பிறகு துஷ்ட தைத்யரான மதுகைடபாள் அந்த வேதரூபமான கண்ணையும, தனத்தையும் க்ரஹித்து ஸமுத்திரத்தின் நடுவில் போய் பாதாளத்தில் பிரவேசித்தார்கள், அவர்களை மத்ஸ்யாவதாரம் செய்தருளி ஸம்ஹரித்து திரும்பவும் தேவரீர் லோகஸ்ருஷ்டிக்கு ஹேதுவான வேதங்களை அடியேனுக்கு ப்ராஸாதித் தருளினீர். ஹே ஸ்வாமீ, லக்ஷ்மீ ந்ருஸிம்ம, தாஸஜன ஸமூஹரக்ஷண ஹேதுவானவரே ? தேவரீர் பொருட்டு தெண்டம் ஸமர்பிக்கிறேன்.

**इन्द्र :—**

श्रीमन् लक्ष्मीनरमृगपते कोलरूपित्वमाद्यः
कल्पादौ यः कनकनयनाक्रांत भूमिं जलांते ।
क्रोडाग्रेण प्रबलमुदधेः दैत्यमत्युग्ररूपं
हत्वा पूर्वस्थितिमुपगतां कर्तुकामोऽसि देवीम् ॥ २४ ॥

**ऋषय :—**

स्वामिन्नद्भुत वैभवोऽसि नृहरे दैत्येन्द्रबाले प्रिये,
भक्ते भक्तपरायणे त्वयि सदा विन्यस्त भारेस्थिते ।
निर्जित्याखिल भूपतीन्निजसुते चात्यन्तकोपान्वितं,
दैत्येन्द्रं नखरैरतीव हि रुषा हत्वा हठाद्राजसि ॥ २५ ॥

---

*ருத்ரன் ஸ்தோத்திரம் பண்ணுகிறார்—*

*"ஹே லக்ஷ்மீ ந்ருஸிம்ம, யாதொரு தேவரீர் அதிபலவானான கூர்மரூபியாய் முதுகில் வைக்கப்பட்ட பூமியை யுடைத்தானவராய், பாதாள லோகத்தில் ஆதிசேஷனாலேயும் ப்ரபலமான திக்கஜ ஸமூஹத்தினாலேயும், தேவதைகளாலேயும், ஸ்தோத்ரம் பண்ணப்பட்டதோ, அப்படிப்பட்ட தேவரீருடைய ஸாமர்த்யமானது இப்பொழுது எங்கே போய்விட்டது? ஸம்ஹாரகாலத்தில் அகில லோகத்திற்கும் ஸம்ஹார கர்த்தாவென்று என்னை ஆக்ஞாபித்து இப்போ அந்தகாலத்தில் தேவரீர் தானே பாலன ஸம்ஹார கர்மங்களிரண்டையும், செய்தருள வேணுமென்று திருவுள்ளம் பற்றிற்று." இந்திரன் ஸ்தோத்ரம் பண்ணுகிறான்—நித்ய ஸம்பத்தை யுடைத்தான லக்ஷ்மீ ந்ருஸிம்ம ஸ்வரூப, யாதொரு தேவரீர் கல்பாதியில் ஆதி வராக ஸ்வரூபியாய் ஸமுத்திர மத்யத்தில் அத்யுக்ரமான*

श्रीमन् वामनरूप तद्बलिमखे गत्वा तमुर्वीपतिं ।
भूत्वार्थी स्वपदत्रयात्तधरणी दानं कुरुष्वेति च ।
लब्ध्वार्थित्वमपोह्य तत् करतलं पादोदकेनाञ्चितं,
कृत्वाक्रान्तजगत्रयः खलु भवान् श्रीनारसिंह प्रभो ॥२६॥

भूपाः —

स्वामिन् परश्वथमुखेन कृता धरित्री,
निक्षत्रिया समभवत् जनकस्य हेतोः ।
तादृङ्महीसुखरेषु हतेषुलोके
कस्मादुपेक्षस इमं जगदन्तकत्वम् ॥

---

ரூபத்தை யுடைய, தைத்யனை ஸம்ஹரித்து ஹிரண்யா க்ஷனுலே அபகரிக்கப்பட்ட பூமியை க்ரோடாக்ரத்தினுல் உத்தரித்து பூமியை பூர்வம் போலுண்டாகிறதற்கு திருவுள்ளம் பற்றிற்று. ரிஷிகள் ஸ்தோத்திரம் பண்ணு கிறார்கள். ஸ்வாமியான ந்ருஸிம்ம, அத்புத வைபவனை நீர், பிரஹ்லாதரானவர் மிகவும் பிரிய பக்தராகவும், பக்த பராதினரான தேவரீரிடத்தில் விந்யஸ்த பரராயு மிருந் துள்ள வளவில், அகில ராஜாக்களையும் ஸம்ஹரித்து விஷ்ணு பக்தனை தன்பிள்ளையிடத்தில் அத்யந்த கோ பத்தோடு கூடிய தைத்யனை தீக்ஷ்ணமான நகங்களால் அத்யந்தம் கோபத்தால் ஸம்ஹரித்து விளங்கா நிற்கிறது.

ஹே ந்ருஸிம்ம ஸ்வாமின் தேவரீர், ஸ்ரீமானை வாமன ரூபியாய், பலிச்சக்ரவர்த்தி யினுடைய, யக்ஞ வாடத்திலேபோய், அந்த பலிச்சக்ரவர்த்தியை, யாசக மாய் என்னுடைய அடியாலே மூன்று அடிபூமி தானம்

ब्रह्मणाः —

श्रीमन् भानुकुलेऽवतीर्य भवता सद्धर्मरूपात्मना,

आत्रासाकममेय दिव्यधनुषा ध्वस्तास्तदा राक्षसाः ।

अद्य त्वं नरसिंह तावक जनान् संरक्ष लक्ष्मीपते,

कोऽन्योऽस्मिन् जगतीतले जनमिमं रक्षिष्यति त्वां विना ॥

स्त्रियः —

श्रीमन्नंबुजसंभवादि दिविजैः आराधिताङ्घ्रे हरेः

तादृग्तद्रुपतात्मजा परिभवाद्दुर्योधनादीन् प्रति ।

दौत्यादिष्वपि दुर्वचानि चरितान्यंगीकृतानि प्रभो,

मादृक् स्त्रीष्वपि दुर्वचः परिभवः कस्मात् तत्वया क्षम्यते ॥

---

பண்ணு என்றுகேட்டு, அதை வாங்கிக்கொண்டு அந்த யாசக வேஷத்தைவிட்டு அவனுடைய கரதலத்தை தம் முடைய திருவடி விளக்கின ஜலத்தினால் நனைக்கபட்ட தாகப் பண்ணி ஆக்ரமிக்கப்பட்ட மூன்று லோகத்தை யுடையவராய் எழுந்தருளியிருந்தீரன்றோ ?

ராஜாக்கள்—ஸ்வாமின் பரசுராம, தேவரீருடைய தகப்பனார் நிமித்தமாக, பரச்வதாயுத முகத்தினால் பூமி யானது ராஜவம்ச மில்லாததாகப் பண்ணப்பட்ட தன் றோ ? அப்படிப்பட்ட பிராமண ச்ரேஷ்டர்கள் ஹதாளா யிருந்துள்ள வளவில் தேவரீர் லோகத்துக் கெல்லாம, கண்டகனானவனை ஸம்ஹரியாமல் என்ன காரணத்தினால் க்ஷமிக்கிறது.

பிராமணர்கள்—ஹேலக்ஷ்மீ ந்ருஸிம்ம, ஸ்ரீமத்தான ஸூர்யவம்சத்தில் "**रामो विग्रहवान् धर्मः**" என்கிறபடியே, தர்மஸ்வரூபமான திருமேனியோடே ப்ராதாவான லக்ஷ் மணனோடு அவதரித்த தேவரால், அமேயமான தனுஸ்

कृष्ण त्वं हलिना सदैव जगतो भारस्य वोढाह्यसि,
हत्वा तं धरणीसुतं नृपवधू संघस्य नाथोह्यसि ।
गोपस्त्री वशगो भवानसि तदा गोपालचूडामणिः,
गो गोपालक रक्षणे धृतमना गोवर्द्धनोद्धारकः ॥ ३० ॥
कल्की भूत्वा कलेरन्ते कलिदोषप्रवर्धकान् ।
हनिष्यसीति ऋषिभिः प्रोक्तवानसि माधव ॥ ३१ ॥

---

ஸால் ராக்ஷஸர்கள் ஸம்ஹரிக்கப் பட்டார்கள். இப்பொழுது தேவரீருடைய ஜனங்களை ரக்ஷிக்கவேண்டும். இந்தப் பூமியில் தேவரீரையன்றி ரக்ஷிக்கிறவர் யார்?.

ஸ்திரீகள் — ஹே ஸ்ரீயஃபதே! பிரம்மா முதலான தேவதைகளால் ஆராதிக்கப்பட்ட திருவடிகளை யுடைத்தானவரே! அப்படி ஸபையில் துச்சாதனனால் அவமானம் பண்ணப்பட்ட த்ரௌபதி நிமித்தமாக துர்யோதனாதிகளைக் குறித்து தௌத்யம் முதலான கார்யங்களில் அத்புதமான சரிதங்கள் செய்தருளப்பட்டது. ஸ்வாமின் எங்களைப் போலிருக்கிற ஸ்த்ரீகளிடத்தில் சொல்லக் கூடாத பரிபவமானது தேவரீரால் என்ன நிமித்தமாக க்ஷமிக்கப்படுகிறது.

ஹே க்ருஷ்ண, தேவரீர் ஹலாயுதரான பல ராமனோடு கூட ஜகத்தினுடைய பாரத்தைப் போக்கடித்து, அந்த நரகாஸுரனை ஸம்ஹரித்து, பதினாயிரம் ராஜ கன்னிகைகளுக்கு நாதனானீர். அப்படிப் பட்ட தேவரீர் கோபிகைகளுக்கு வச்யனான படியால் கோபாலர்களுக்கெல்லாம் சிரேஷ்டனாய், பசுக்களுடையவும், கோபாலர்களுடையவும், ரக்ஷணத்தில் திருடமான மனஸ்ஸை யுடையவராய் கோவர்த்தனோத்தாரகரானீர்.

आदावेव युगेह्यस्मिम् लोकहिंसा विहारकाः ।
आक्रम्य धरणीं सर्वां चरन्त्यसुवसान् खलाः ॥ ३२ ॥
सर्वे वयं प्रपन्नास्मः चरणौ नरसिंह्म ते ।
रक्ष रक्ष रमानाथ शरणागत वत्सल ॥ ३३ ॥

**इति श्री ब्रह्माण्डपुराणे अर्चावतारस्थलवैभवकथने विष्णुचित्त मरीचिसंवादे पद्मगिरिमाहात्म्ये नवमोऽध्यायः ॥**

---

ஹே மாதவ, கலியுகத்தில் கல்கியாய் அவதாரம் செய்தருளி கலிதோஷ ப்ரவர்த்தகர்களான ம்லேச்சாதிகளை ஸம்ஹரிக்கப் போகிறதென்று ரிஷிகளால். சொல்லப்பட்டது.

இந்தக் கலியுகத்தில் ஆதியிலேயே லோகஹிம்சையை விளையாட்டாக உடைத்தானவர்களான துர்மார்கர்கள் ஸமஸ்தமான பூமியையும் ஆக்ரமித்துப் பிராணர்களையும் தனங்களையும் அபஹரிக்கப் போகிறார்கள். ஹே ந்ருஸிம்ம, ஸகலமான நாங்கள் தேவரீருடைய திருவடிகளை சரணமாக அடைந்தோம். ஹே லக்ஷ்மீபதே, எங்களை ரக்ஷிக்கவேணும்.

பிரம்மாண்ட புராணத்தில் அர்ச்சாவதாரப் பெருமையைக்
கூறுவதான விஷ்ணு சித்தர் மரீசி இவர்களுடைய
ஸம்வாதத்தில் பத்மகிரி மாகாத்ம்யத்தில்
ஒன்பதாவது அத்யாயம் முற்றிற்று.

## दशमोऽध्यायः प्रारम्भः

**विष्णुचित्तः —**

लोकरक्षां कथं ब्रह्मन् अर्चारूपी करिष्यति ।
लक्ष्मीनरहरिः कस्मिन् तेजसाविर्भविष्यति ॥ १ ॥

**मरीचिः —**

विष्णुचित्तमहाभाग श्रुणुष्व जगतां प्रभो ।
वैभवं विभवे यत्स्यात् तदर्चायां च वैभवम् ॥ २ ॥
अत्रेर्वंशे शुचौविष्णु भक्तिसाम्राज्यवर्धके ।
लक्ष्मीनृसिह्म पादाब्ज भक्तिमान् वैष्णवे कुले ॥ ३ ॥

---

விஷ்ணு சித்தர் கேழ்க்கிறார்—ஹே பிராமணச்ரேஷ்டரே, அர்ச்சா ரூபியான லக்ஷ்மீ ந்ருஸிம்மன் லோக ஸம ரக்ஷணத்தை எப்படி செய்தருளப்போகிறார். தம்முடைய தேஜஸ்ஸினால் யாரிடத்தில் ஆவிர்ப்பவிக்கப்போகிறார். என்று கேழ்க்க மரீசி சொல்கிறார்— வாரீர் விஷ்ணு சித்தரே! கேளும் ஜகத்துக் கெல்லாம் ஸ்வாமியினுடைய விபவாவதாரத்தில் யாதொரு வைபவ முண்டோ அந்த வைபவமானது அர்ச்சாவதாரத்திலேயுமுண்டு.

பரிசுத்தமான விஷ்ணு பக்த ஸாம்ராஜ்யத்திற்கு வ்ருத்திகரமான அத்ரிமஹர்ஷி வம்சத்தில் வைஷ்ணவ ஸந்ததியில் லக்ஷ்மீ ந்ருஸிம்மனுடைய திருவடிகளில் பக்தியுடையவனாய், மஹாவிபவத்தை யுடைத்தானவராய், நல்லபுத்திமானாய், பெரியவாளுக்கு இஷ்டனாய், லௌகிக வைதிகங்களில் நிபுணராய் பரிசுத்தராய் ஒருவர் உண்டாகப்போகிறார். ந்ருஸிம்ம த்யானபரரான அவருடைய

जनिष्यति महाभागः कश्चित्तु बुधसंमतः ।
लौकिके वैदिके चैव निपुणो गुणवान् शुचिः ॥ ४ ॥

तस्य चिन्तयमानस्य स्वप्ने नरहरिश्श्रिया ।
कथयिष्यति सद्वाक्यं लोकरक्षणतत्परः ॥ ५ ॥

अहो जगति मद्भक्ताः विद्यन्ते दुष्टभूमिपैः ।
मयि सन्यस्त भारस्त्वं यतस्व रिपुनिर्जये ॥ ६ ॥

अर्जुनेन यथा पूर्वं भूभारश्चावरोपितः ।
त्वामाविश्याहमेवाद्य लोक रक्षां करोमि च ॥ ७ ॥

ஸ்வப்னத்தில், ந்ருஸிம்மரானவர் லக்ஷ்மியோடு கூட லோகரக்ஷணதத்பரராய், மதுரமானவார்த்தையை அருளிச் செய்தார். ஆச்சரியம், பூமியில் என் பக்தாளானவர்கள் துஷ்ட ராஜாக்களால் பீடிக்கப்படுகிறார்கள். என்னிடத்தில் நன்றாக வைக்கப்பட்ட பாரத்தை யுடைத்தானவராய் சத்ரு ஜயத்தில் நீர் யத்னம் பண்ணவேணும்.

அர்ஜுனனாலே பூபாரமானது எப்படி போக்கடிக்கப்பட்டதோ, அப்படி இப்போது நான்தானே உன்னிடத்தில் ஆவேசித்து லோகரக்ஷணம் பண்ணுகிறேன். சத்ரு ஸம்ஹாரத்தில் நிமித்தமாகக்கடவாய், நான் ஸமஸ்தமான சத்ருக்களையும் நாசம் செய்கிறேன். என்னுடைய பாகத்தில் வைக்கப்பட்ட மனஸ்ஸை யுடைத்தானவனாய் யத்னம் பண்ணு. ஹீணை ராஜாக்களை யாச்ரயித்துக் கொண்டிரு வென்றருளிச் செய்தார்.

இந்த ப்ரகாரம் பகவனாலே சத்ரு நிக்ரஹத்தில் நியமிக்கப்பட்டவராய், ஹிமவத்பர்வத ஸமீபத்தில் வாஸம்

निमित्तमात्रं भव दुष्टनिग्रहे करोम्यहं सर्वरिपुक्षयं द्रुतं ।
त्वमद्य मत्पादनिविष्टमानसः श्रयस्व हूणान् पृथिवीपतीनिह ॥८॥
एवं स्वप्ने भगवता चोदितो रिपुनिग्रहे ।
हिमवत् प्रांत देशस्थान् कामधेनु तनूद्भवान् ॥ ९ ॥
विश्वामित्रकृते पूर्वं वसिष्ठेन प्रचोदितान् ।
कांभोजान् यवनैर्मिश्रान् हूणान् दृढपराक्रमान् ॥ १० ॥
दृढानमेयान् रिपुनिग्रहे चणान्
उपायतश्शत्रु निवारणोद्यतान् ।
अनेक नानाविध पावकायुधान्
दुर्गैश्शतघ्नीशत संकुलैर्युतान् ॥ ११ ॥

---

பண்ணுகிரவர்களாய் காமதேனுவினுடைய சரீரத்தில் பிறந்தவர்களாய், பூர்வகாலத்தில் விச்வாமித்ரர் நிமித்தமாக வஸிஷ்டராலே ஆக்ஞாபிக்கப்பட்டவர்களாக இருக்கிற காம்போஜ தேசத்தில் பிறந்தவர்களாக யவனர்களோடு கூடித்ருடமான த்ருடமானபராக்ரமத்தை யுடைத்தான ஹூணர்களை தார்ட்யத்தை யுடைத்தானவர்களாய், அறியக் கூடாத ஸ்வபாவத்தை யுடைத்தானவர்களாய், சத்ரு ஜயத்தில் ஸமர்தர்களாய், உபாயத்தினால் சத்ரு ஜயத்தில் உத்யுக்தாளாய், அனேகவிதமான அக்னி ஆயுதங்களை உடைத்தானவர்களாயிருக்கிற ஹூணப்ரபுக்களை யாச்ரயித்து அவர்களுடைய மர்மத்தையும், சத்ருக்களிடத்திலுள்ள மர்மத்தையும் நிச்சயித்து ஒருவராலும் அசைக்கக் கூடாதபலத்தை யுடையவர்களைச் சேர்த்து அவர்களுக்கு சத்ரு ஸைன்ய

संश्रित्य तेषामपि कर्मवित्स्वयं,
परेषु मर्माण्यपि संप्रधार्य च ।
संव्यूह्यचैनानविचाल्यसत्वान्,
प्रबोध्य तेषां परसैन्य मर्म ॥ १२ ॥
कृष्णो यथा पाण्डव दौत्य कर्मण-
यासाद्य सेनानयने विचक्षणः ।
दुर्योधनादीन्यपि दुष्टभूपतीन्
भूभारभूतान् विचकर्त बाणैः ॥ १३ ॥

---

மர்மத்தை தெரியப் பண்ணி க்ருஷ்ணன் எப்படி பாண்டவர்களுக்கு தௌத்ய ஸாரதயத்தைப் பண்ணி ஸேனா நாயகத்தில் ஸமர்த்தராய் பூமிக்குப் பாரமான துர்யோதனன் முதலான துஷ்டராஜாக்களை பாணங்களால் சேதித்தாரோ, அப்படிப்பட்ட ஹூணாளை வ்யாஜீகரித்து துராத்மக்களான சத்ருக்களை ஜயிக்கிரதற்கு துர்கங்களையும் காடுகளையும் பர்வதங்களையும் அதிக்ரமித்து அவர்களுடைய தேசங்களை ஆக்ரமித்து பர்வதங்களை ஆக்ரமித்து அந்த சத்ருக்களை தேசப்ரஷ்டர்களாகவும், ஏகாந்தமான பர்வதங்களில் ப்ரவேசித்தவர்களாகவும் பலமில்லாதவர்களாகவும் சரீரவிமுக்தாளாகவும், அவர்களுடைய ஸ்த்ரீகளை முக்த கேசர்களாகவும் பண்ணி, பாதாக்ராந்தாளாகப் பண்ணிக்கொண்டு அவர்களுடைய தனங்களையும் க்ரஹித்து, அவர்களால் ஸ்வஸ்தானங்களில் நிருத்தி பூமியை ஸுகமாய் இருக்கும்படியாய், ஸகல ஜனங்களை

ஆச்வாஸனம் பண்ணி சிஷ்டாளை நல்ல வசனங்களாலேயும், அர்த்தாலேயும், ஸந்தோஷ யுக்தராக்கி, அந்த

व्याजीकृत्य तथा हूणान् शतान् जेतुं दुरात्मनः ।
अतिक्रमम्य च दुर्गाणि वनानि च महागिरीन् ॥ १४ ॥

देशानाक्रम्य तेषां तत् स्थानानि च महानि च ।
पलायमानान् तान् देशात् प्रविष्टान् गिरिसानुषु ॥ १५ ॥

गहनेषु च दुर्गेषु गतसत्वाननेकशः ।
मुक्तदेहांश्च तान् कृत्वा मुक्तकेशाश्च तत् स्त्रियः ॥ १६ ॥

पादाक्रांतांश्च तान् मुक्त्वा हृत्वा बहुधनं ततः ।
देशानाक्रम्य च बहून् स्वस्थानेषु निवेश्यतान् ॥ १७ ॥

ततः स्वस्थां महीं कृत्वा जनानाश्वास्य सर्वशः
हतशेषाः प्रजाः सर्वाः संतोष्य वचनैः धनैः ॥ १८ ॥

लक्ष्मीनृसिह्मपादाब्जे ,विज्ञाप्य विनयेन च ।
तत् कटाक्षाभिसंवृद्ध समृद्धिर्विनयान्वितः ॥ १९ ॥

---

லக்ஷ்மீ ந்ருஸிம்மனுடைய ஸகல கைங்கர்யங்களையும் பண்ணப் போகிறார்.

திவ்யமான விமானங்களையும் உத்தமான ப்ராகாரங்களையும், விசாலமான மண்டபங்களையும், திவ்யங்களான ஆபரணங்களையும் மஹத்தான வாஹனங்களையும், விசித்திரமான வஸ்திரங்களையும், அநேகமான ஸ்வர்ணதண்டிகைகளையும், வஜ்ர வைடூர்ய கசிதமான கவசத்தையும் ஸமர்ப்பிக்கப் போகிறார், நித்ய நைமித்திகோத்ஸவங்களையும், ப்ரதி ஸம்வத்ஸரம் மஹோத்ஸவத்தையும் பரிபாலனம் பண்ணிவைக்கப் போகிறார். யதாகாலங்களில்,

तस्य कैंकर्यमखिलं करिष्यतिमुदान्वितः ।
विमानानि च दिव्यानि प्राकारं चाप्यनुत्तमं ॥ २० ॥

विपुलान् मण्डपांश्चैव उद्यानानि च बहूनि च ।
भूषणानि महार्द्राणि वाहनानि महान्ति च ॥ २१ ॥

वस्त्राणि च विचित्राणि हैमानि सुबहून्यपि ।
वज्र वैडूर्यखचित कवचं सूर्यवर्चसं ॥ २२ ॥

उत्सवानतिभोग्यांश्च नित्यनैमित्तिकानपि
वर्षे वर्षे च सुमहदुत्सवं पालयिष्यति ॥ २३ ॥

नैवेद्यं विधिवन्नित्यं शर्करापूप संयुतम् ।
सूपपायस संपूर्णमाज्य प्लुतमकल्मषम् ॥ २४ ॥

அதிரஸ திருப்பணியாரங்களோடு கூடினதாய், ஸூப பாயஸங்களுடன், ப்ரவஹியானின்ற நெய்யோடு கூடினதாய், ஷட்ரஸோபேதமாக, லக்ஷ்மீ ந்ருஸிம்மன் அமுது செய்தருளப் போகிறார்.

கைங்கர்யம் செய்கிறவர்களையும், இதர பக்தர்களையும் பாகவதர்களையும், ஆராதிக்கப் போகிறார். சுபமான த்ரிவேணீ ஸங்கமத்தில், விசாலமான திருமாளிகைகளையும், விஸ்தாரமாகக் கல்பித்து ச்ரோத்ரியாளான, ஸ்ரீ வைஷ்ணவாளான வித்வான்களுக்கு மஹா ஸமிர்த்தியோடு பசுக்களோடு ஸம்பூர்ணமான, தான்ய, ராசிகளோடும் ஸமர்ப்பிக்கப் போகிறார். கோதானம் கன்னிகாதானம், உபனயனம், இதுகளெல்லால், பஹுவாய் ஸ்ரீ ந்ருஸிம்மன் ஸன்னிதியில் பண்ணிவைக்கப் போகி

नानाव्यंजसंयुक्तं षड्रसोपेतमद्भुतम् ॥
स्वीकरिष्यति वै नित्यं लक्ष्मीनरहरिर्विभुः ॥ २५ ॥
कैङ्कर्यनिष्ठानपरान् भक्तान् भागवतानपि ।
आराधयिष्यति सदा त्रिवेण्याः संगमे शुभे ॥ २६ ॥
भवनानि विशालानि कल्पयित्वा बहून्यपि ।
श्रोत्रियेभ्यश्च विद्वद्भ्यः वैष्णवेभ्यो विशेषतः ॥ २७ ॥
प्रदापयिष्यति महासंपद्भिः सह गोधनैः ।
पात्रजातैश्च संपूर्णैः संपूर्णैः धान्यराशिभिः ॥ २८ ॥
गोदानं कन्यकादानं तथोपनयनं बहु ।
कारयिष्यति तत्रैव श्रीनृसिंहस्य सन्निधौ ॥ २९ ॥
तत्रोद्यानं प्रकल्पेयुः विचित्रमतिविस्तरम् ।
मल्लिका माधवीजाति कुन्दगुल्मैः समावृतम् ॥ ३० ॥
चंपकाशोकपुंनाग वगुलैः करवीरकैः ।
रक्तोत्पल तटाणैश्च पद्मिनीभिश्च शोभितम् ॥ ३१ ॥

---

ரூர். அந்தஸ்தலத்திலே, உத்யானத்தை அதிவிஸ்தாரமாகவும் விசித்ரமாகவும் உண்டாக்கி, மல்லிகை முல்லை கொடமல்லிகை, சிரு செண்பகம் · குருக்கத்திப் புதர்களாலே சூழப்பட்டதாய், சம்பகம் அசோகம் புன்னை முதலிய விருக்ஷங்களாலும், குங்குமம், அலரி, கஸ்தூரி, செங்கழுநீர் ஓடைகள் தாமரை ஓடைகள் இதுகளால் சோபிதமாய், ஸதா மதித்து ஆனந்தத்தினல் கானம் பண்ணிக் கொண்டிருக்கிற வண்டுகளாலேயும் கோகில சப்தங்களாலும் சப்திக்கப்பட்டு, மா மரங்களால் சூழப் பட்டிருக்கிற அந்த உத்யானவனத்திலிருக்கிற புஷ்பங்

TTD CENTRAL LIBRARY



सदा मत्तैः मधुकरैः आनंदात् गातुमुद्यतः ।
कोकिलालापसंघुष्ट चूतवृक्षैः समावृतम् ॥ ३२ ॥
तत्रत्यपुष्पनिवहैः पूजयिष्यति माधवम् ।
नृत्तगीतादि वाद्यैश्च पूरिताशा मुखं सदा ॥ ३३ ॥
भविष्यति हि तत् स्थानं दिवि वैकुण्ठवत् भुवि ।

*　　　*　　　*

**इति श्री ब्रह्माण्डपुराणे अर्चावतारस्थलवैभवकथने विष्णुचित्त मरीचिसंवादे पद्मगिरिमाहात्म्ये दशमोऽध्यायः**

---

களால் ஸ்ரீந்ருஸிம்மனை ஆராதிக்கப் போகிறார். ஸர்வ காலமும் ந்ருத்தகீத வாத்ய சப்தங்களால் நிறைந்ததாய் பரமாகாசத்தில் வைகுண்ட நகரம்போல் அந்த ஸ்தலம் இருக்கப் போகிறது.

இத்தகைய சிறப்பையுடைய இந்த திவ்ய தேச சரித்திரத்தை சிரவணம் செய்தவர்கள் ஸ்ரீ வைகுண்டத்தில் எம்பெருமானுக்குகந்த நித்ய ஸூரிகள் பதவியை அடைவார்கள். இந்த திவ்ய தேசத்திற்குச் செல்கிறேன் என்ற மாத்திரத்திலேயே ஸர்வ பாப நாசனம் என்று பெரியவாள் ஸாதித்தருளினார்கள் அன்றோ? **लक्ष्मीनृसिंहस्य चरित्रं सर्वपापप्रणाशनं** என்ற ஸூக்திப்படி வையம் முழுதும் வாழ இந்த கிரந்தம் வழிகாட்டியாகி யுள்ளது.

பிரம்மாண்ட புராணத்தில் அர்ச்சாவதாரப் பெருமையைக்
கூறுவதான விஷ்ணு சித்தர் மரீசி இவர்களுடைய
ஸம்வாதத்தில் பத்மகிரி மாகாத்ம்யத்தில்
பத்தாவது அத்யாயம் முற்றிற்று.

---

**குறிப்பு:** கடைசியாக உள்ள சில ஸ்லோகங்கள் கிடைக்கவில்லை.